அகில இலங்கை இந்துமகாநாடு

விசேஷ பிரசுரம்.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

''எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்''.

''சீர்பூத்த கருவிழு ணுணர்ச்சி தேக்கச் செம்பூத்த நிகமாக மங்க ளோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப், பேர்பூத்த சிவானந்த நினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.''

''வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.''

புத்தகம்—சடு | யாழ்ப்பாணம்:—ஸ்ரீமுக வூ மார்கழிமீ கஅவ; (1934 ஜனவரி 1) திங்கட்கிழமை. | இலக்கம்—ஏ௩

## இந்துமத விருத்தியும் நமது கடனும்;

### சமயக் கல்வியும் தமிழ்மொழி வளர்ச்சியும்;

### வரவேற்புத் தலைவர் விரிவுரை;

—:*:—

**அகில இலங்கை இந்துமகாநாட்டின் வரவேற்புத் தலைவர், [திருநெல்வேலிச் சைவாசிரியர் கலாசாலைத் தலைமையாசிரியர்] திரு. S. சுவாமிநாதன் B. A. அவர்கள் நிகழ்த்திய பிரசாரணம்**

**சைவ** பரிபாலன சபையாரின் ஆதரவில் இம்மகாநாடு கூட்டப்பட்டது. இதுபோன்ற மகாநாடுகள் பல இந்து வாலிப சங்கத்தாராலும் சைவசித்தாந்த மகா சமாஜத்தாராலும் முன் நடத்தப்பட்டனவாயினும் அகில இலங்கையையுஞ் சேர்த்து முதன் முதற் கூடிய மகாநாடு இதுவே. இக்காரணத்தானே இம்மகாநாடு "அகில இலங்கை இந்து மகாநாடு" எனப்பட்டது. இதனை அபிமானித்து, எங்கள் அழைப்பைப் பொருட்படுத்தி இலங்கையின் பலபாகங்களினுமிருந்து வந்து சமுகஞ் செய்திருக்கின்ற சகோதர சகோதரிகளாகிய உங்களனைவர்க்கும் இம்மகாநாட்டின் வரவேற்புச் சபை அன்பார்ந்த நன்றிகூறுகின்றது. அன்றி இம்மகாநாட்டைக் கூட்டுதற்குக் காரணர்களாய் ஊக்கப்படுத்தி வேண்டிய உதவிகளும் புரிந்த புரிகின்ற சைவப்பிரபுக்களையும் பெரிதும் பாராட்டுகின்றது.

இம்மகாநாட்டின் மற்றொரு விசேஷம் எவராலும் கொண்டாடற்குரியது. இதன் தலைமைப்பதவியை எங்கள் வேண்டுகோளுக்கிசைந்து மிக்க ஆர்வமையோடும் ஏற்றுக்கொண்டவர்கள் சைவத்திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A. அவர்கள் தாய் நாட்டிலே பரம்பரைச் சைவமரபிலே உதித்தவர்கள். ஆங்கில பாஷையை நன்கு பயின்று அதில் விசேஷ பட்டம் பெற்றவர்களாயினும் ஆங்கில நாகரீகவலையுள் அகப்படாது தங்களுயர்குடிப் பிறப்புக்குஞ் சைவ நன்மரபுக்குமேற்பப் பழைய வைதிக சைவ நெறியையே பின்பற்றி தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களில் மிக்க அன்புடையவர்களாய் சைவசமய நூலாராய்ச்சியும் சிவபூசை முதலிய உத்தம சைவாநுஷ்டானங்களுமே பொழுதுபோக்காகவுள்ளவர்கள். சென்னைச் சர்வகலாசாலையின் கலாசங்கத்தின் அங்கத்தவர்கள். உலோகோபகாரமாகப் பல சைவ நூல்களை வெளியிட்டிருக்கின்றார்கள். சைவாபிவிருத்திச் சங்கங்கள் பலவற்றினுஞ் சேர்ந்து சைவ சமயவிருத்திக்கே தங்கள் வாணாளை அர்ப்பணஞ் செய்திருக்கின்றார்கள். இத்துணைப் பெருந்தகையாளர்களை இம்மகாநாடு தலைவராகப் பெற்றது இந்நாட்டிலுள்ள சைவ நன்மக்கள் செய்த பெருந் தவப்பேறேயாகும்.

தலைவர் அவர்கள் சைவசமய உண்மைநெறியை எம்மனோர்க்கு எடுத்துக் காட்டுமுன் அவர்களுக்கு இந்நாட்டினியல்பையும் இதன் சமய நிலையையும் பிறவற்றையுந் தெரிவிக்கவேண்டிய கடமை எனக்கு விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலாலவற்றை ஒருவாறு சுருங்கிச் சொல்லலா மென்றெண்ணுகிறேன்.

இவ்விலங்கைத்தீவின் மத்தியபகுதி சிறந்த மலைவளம் நதிவளம் வாய்ந்தது. பூமிதேவியின் இயற்கையழகை உள்ளவாறு காட்டுமிடங்களில் அதுவுமொன்று. பரதகண்டத்திலே கஷ்மீரதேசத்துக்கொப்பாகக் கருதப்படுகின்றது. கரைப்பாகங்கள் பழைய அரசர்களாற் கட்டப்பட்ட பலகுளங்களையும் விளைநிலங்களையுமுடையவை. அவைகளுட்பல இப்பொழுது சிதைவடைந்து கிடக்கின்றன. அநுராசபுரம் பழைய அரசர் பலர்க்கு இராசதானியாயிருந்தது. பழைய பெரிய அழிந்த கட்டடங்களையும் புத்த விகாரைகளையுமுடையது. சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் தரிசிக்கவேண்டிய இடங்களுளதுவுமொன்று. இலங்கையின் பிரதான நகரம் கொழும்பு. உலகசஞ்சாரஞ் செய்யுங் கப்பல்கள் வந்து தங்கும் விசேஷ துறைமுகம் உள்ளது. உலகத்திலுள்ள பெரிய மகான்கள் பலர் அடிக்கடி தரிசிக்குமிடமாய் விளங்குகின்றது. இலங்கையின் வடபாகம் - பிரதானமாக யாழ்ப்பாணம் - இது மலைவளம் நதிவளம் இல்லாததாயினும் மற்றொரு சிறந்த வளமுள்ளது. தென்றல்வளம். தென்றலைச் சோழகக்காற்றென்று வழங்குவார்கள். இக்காற்று சித்திரைதொடக்கம் ஆறு மாசங்களுக்கு இங்கே வீசுகின்றது. இதனை இந்நாட்டிலுள்ளார் அனுபவிக்கும் ஆரோக்கியத்திற்களவில்லை. இதற்கும் பொதியமலைக்குந் தொடர்புகூறி இதனைப் புலவர்கள் வர்ணிப்பார்கள். அதனாற்போலும் யாழ்ப்பாணத்திலே தமிழ்மணமும் சிவமணமும் இடையறாது என்றும் கமழ்கின்றன. யாழ்ப்பாணத்திலே இன்னும் பல விசேஷமுண்டு. இங்கே மிக்க குளிருமில்லை, மிக்க உஷ்ணமுமில்லை கள்வர்பயம் மிருகபயம் முற்றுமில்லை. இங்குள்ளவர்கள் மிக விவேகிகள். விவேகத்தை வளர்த்தற்கேற்ற செல்வமில்லை; ஆனால் வறுமையுமில்லை.

இலங்கையிலே சிறந்த பல சிவஸ்தலங்களிருக்கின்றன. "நவகோடி சிவாலயங்கள் நணியதிலங்காநகரம்" என்று கூறப்படுகின்றது. இரு சிவஸ்தலங்கள் தேவாரம் பெற்றவை. ஒன்று திருக்கோணமலை. இதற்குத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பதிகம் ஒன்றிருக்கின்றது. மற்றொன்று திருக்கேதீச்சரம் இதற்குத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றும், சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. சிவாலயங்கள் போல சுப்பிரமணியாலயங்களும் விநாயகாலயங்களும் பல இருக்கின்றன. சுப்பிரமணியாலயங்களுட் சிறந்தது கதிர்காமம். இது எப்படிப்பட்டவர்களுக்கும் பத்தியைப் பெருக்குகின்ற ஒரு திவ்விய க்ஷேத்திரம். அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்றது. இங்குள்ள பெரும்பாலார்க்குச் சுப்பிரமணியக்கடவுளே குலதெய்வம். வல்லிபுரம் சொர்ணாலயம் முதலிய விஷ்ணு தலங்களும் புத்த ஆலயங்களும் பாலாவி, மாணிக்ககங்கை, நகுலதீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களும் பல ஆங்காங்கேயிருக்கின்றன.

இங்கு வசிக்குஞ் சாதியார் வேடர் சிங்களவர் தமிழர் சோனகர் பறங்கியர் ஐரோப்பியர். இங்குள்ள சமயங்கள் புத்தம் சைவம் இஸ்லாம் கிறீஸ்தவம் என்பன.

இலங்கையின் குடிசனங்களின் தொகை 54 இலக்ஷம். இவர்களில் தமிழர் 12 இலக்ஷம். தமிழர் இலங்கைத்தமிழர் இந்தியத்தமிழர் என இருதிறப்படுவர். இலங்கைத்தமிழர் நிரந்தரமானகுடிகள். இந்தியத்தமிழர் தோட்டக் கூலியாளர்களும் வியாபாரஞ் செய்பவர்களுமான போக்குவரவுக்காரர்கள். இவ்விருதிறத்தார்களுள்ளும் இந்தியத் தமிழர்களே தொகையிற் கூடியவர்கள். இலங்கைத்தமிழர்களின் தொகை 5½ இலக்ஷம். இந்தியத் தமிழர்களின் தொகை 6½ இலக்ஷம். இந்த இருதிறத்தார்களுமே சைவமதத்துக்குரியவர்கள் இவர்களுள்ளும் ஏறக்குறைய 11 வீதமானவர்கள் ஏனைய மதங்களைத் தழுவிக்கொண்டார்கள்.

#### சமயவளர்ச்சி.

தமிழர் பூர்வந்தொட்டு இலங்கையின் வடபாகத்தை ஆண்டுவந்தனர். ஆதலினால் இவ்வடபாகத்தில் சைவசமயம் அபிவிருத்தியெய்தி அரசர்கள் பாதுகாப்பில் வளர்ந்து வந்தது. போர்த்துக்கேசர் இலங்கைக்கு வருமுன் யாழ்ப்பாண இராச்சியத்தில் மாத்திரம் 580 கோயில்களும் மடங்களும் இருந்தனவாம். மடங்களிலும் கோயில்களிலுமே கல்விகற்பிக்கப்பட்டது. புராணபடனம் கிரமமாக நடைபெற்றது. பல்வகைச் சாத்திரங்களும் ஆராயப்பட்டன. வைத்திய சோதிட சாஸ்திரங்களை நன்கு பயின்றார்கள். யாழ்ப்பாண

(தொடர்ச்சி 2-ம் பக்கம்.)

உ

சிவமயம்

தென்னிந்தியாவில் தமிழ்மொழி வளரவும்,
சைவசித்தாந்தம் மேம்பாடுறவும் பல்லாண்டுகளாக உழைத்து வாராநிற்கும்

சைவத்திருவாளர்.

## C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

ஈழத்துக்கூடிய இந்துமகாநாட்டின் கண்
தலைமையேற்க வந்துழிப் பாடிய

# வரவேற்புப் பாக்கள்.

[நவாலியூர் திரு க. கி. நடராஜன் அவர்கள் இயற்றியது]

### வெண்பா

வாழி சிவசமயம் வாழிசிவ ஞானதொண்டர்
வாழியிந்து நல்லோர்கள் மன்னுசபை—வாழியரோ
ஊழி பெயர்ந்திடினு முண்மைபெய ராப்பெரியோர்
வாழியவர் சீருலகின் வாய்.

### ஆசிரியப்பா

சிவநெறிச் செல்வன் செந்தமிழ்த் தாதா
பவநெறி நீக்கிய பான்மையன் பெரியன்
செறுபுல னுடைய குறுமுனி யனையான்
பொய்வகைச் சமயப் புதையிருள் புடைபட
மெய்வகை யொளிவிரி சைவ சிகாமணி
நாவலன் உதித்த நல்லியாழ்ப் பெயரிய
பாவலர் போற்றும் பழம்பெரு நாட்டில்
முத்தமிழ் வீரக வித்தக வரனைப்
பத்திசெய் பனுவல்க ளித்தரை மாறித்
தெய்வக் கொள்கை சிறிதா யருகிச்
சீலம் பொய்யாய் ஞாலமே மெய்யாய்
மக்கள்
அரும்பசிக் குணங்கியும் பெரும்பிணிக் குடைந்தும்
போலிநா கரிக மாலினிற் பட்டும்
கோலமே போற்றுங் காலமா மிந்நாள்
கட்டவு ணல்லூழ் பிடர்பிடித் துந்த
முழங்கு முந்நீர் முதுநிலை வளை இய
வளங்கெழு மீழம் வதியுமிந் துக்கள்
மெய்வரு சைவமும் மேம்படு தமிழும்
ஞானமும் பொறையு நன்றியு மூக்கமுந்
தானமுங் கொடையுந் தகைசா லன்பும்
மானமுந் தவமும் வாய்மையு மாண்பும்
ஒழுக்கமு முயரிய வுறுதிசூழ் வினையு
முய்வான் வேண்டிச் செய்வகை செய்து
மகிமைக் குரிய வகில விலங்கை
இந்துமா சபையைச் செந்தமிழ் முறையில்
நிறுவினர் அதனாற் பெருமகிழ் வடைந்தனம்;
அதனினும் பெரிதா விறும்பூது பயக்கும்
மங்கலச் செய்தி மற்றொன் றுண்டு:
அன்ன தியாதோ வென்னவே வினவில்
இந்திய நாட்டிற் செந்தமிழ் வளருங்
கோவைப் பதிவரு தேவே யனையோய்!
பாக்களி லுயரிய சேக்கிழான் பாட்டினைத்
துருவித் துருவி யாய்ந்தநற் பெரியோய்!
நீத்தார் பெருமையைக் கோத்தநற் புகழோய்!
கருவூர் நீத்த கருவூர்த் தேவரின்
பெருமையை யுணர்த்திப் பிறங்கிடு ஞானி!
வெள்ளைக் கிழத்தியின் தெள்ளருட் குளித்து
முருகு விரியும் முத்தமிழ்ச் செல்வி
கருணம் பிகைமே லருண்மொழி மானும்
பிள்ளைக் கவியினைச் சொல்லிய புலவோய்!
சென்னைமா நகரிற் சிறந்த பல்கலைக்
கழகத் துக்கலா சங்கவங் கத்தோய்!
ஆத்துக் குடியில் ததைதரு சைவர்
ஏத்திப் புகழ விண்ணுரை நிகழ்த்தியோய்!
சித்தாந்த சமயத் தேனமு தருந்திய
உத்தமப் பெரியோய்! உயர்குணம் வாய்ந்தோய்!
பத்தியின் மிகுந்தோய்! பலமொழி பயின்றோய்!
நின்னைத் தலைவனாக் கொண்டிடுஞ் செயலே;
இன்னதா வியாமும் இனிதே மகிழுபு
முன்னை முறைவழி முதல்வனை வேண்டி
வரவேற் குதுமே வரவேற் குதுமே!
பெரியவை தெருட்டிய தெரிவையு முன்னாள்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே
யென்றன னாதனாற் றுன்றிய வன்பொடு
நின்புகழ் கூறி நின்மொழி போற்றி
வரவேற் குதுமே வரவேற் குதுமே!
சைவந் தழைகத் தமிழ்நனி மலர
மெய்யடி யாரொடு மேதினி யோங்க
நின்னை
வரவேற் குதுமே வரமேற் குதுமே!

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

அரசர் ஆதரவில் "கல்விச்சங்கம்" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் வளர்ச்சியின் பொருட்டுச் "சங்கத்தார்வயல்"களு மிருந்தன. புலவர்கள் பலர் அச்சங்கத்தில் அங்கத்தவர்களா யிருந்தார்கள். இரகு வம்மிசம் இயற்றிய அரசகேசரி அச்சங்கப்புலவர்களுளொருவர். இங்கேயுள்ள கோயில்களுட்பல அரசர்களாற் கட்டப்பட்டவை.

சமய வீழ்ச்சி.

போர்த்துக்கேசர் இங்கே வந்தகாலந்தொடங்கிச் சைவசமயம் நிலைகுலையத் தொடங்கியது. யாழ்ப்பாணத்துக்குப் போர்த்துக்கேசரால் முதன்முதல் நியமிக்கப்பட்ட "டிஓலிவரா" என்ற தேசாதிபதி, யாவருங் கத்தோலிக்கராகவேண்டுமென்று ஒருசட்டம் பிறப்பித்தான். அன்றி, சைவக்கோயில்கள் பலவற்றையிடித்து அழித்தும் வந்தான். வாழையிலையிற் சாப்பிடுவதும் அக்காலத்திற் சட்டவிரோதம். பக்திமான்கள் பலர் வீட்டுமூலை முடுக்குகளிற் கோயில்களையமைத்து வழிபட்டும் சாப்பிட்ட இலைகளை மறைத்தும் ஒழுகி வந்தார்கள். கலாசாலைகளெல்லாம் கத்தோலிக்க குருமாரால் ஸ்தாபிக்கப்பட்டன. யாழ்ப்பாணமும் பலகத்தோலிக்கக் கோவிற்பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டது. உத்தியோகம்பெறவிரும்புவோர் கத்தோலிக்க குருமார்கள் மூலமாகவே விண்ணப்பஞ் செய்யவேண்டும்: இந்த நிலையில் சைவசமயக் கல்வியாவது சைவச்சாதனைகளாவது வளர்ச்சியடைவ தெங்ஙனம்? ஒரு சிலர் மாத்திரம் திண்ணைப்பள்ளிக்கூடங்களில் அவற்றைமிக மறைவாகப் பயின்று வந்தனர்போலும். போர்த்துக்கேசரின் அக்கிரமத்துக்கு அஞ்சி இந்நாட்டைவிட்டகன்ற ஞானப்பிரகாச சுவாமிகளின் சரித்திரம் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

ஞானப்பிரகாச சுவாமிகளென்பவர் யாழ்ப்பாணத்து நல்லூரைச்சார்ந்த திருநெல்வேலியில் போர்த்துக்கேச அரசினர்காலத்திலிருந்தவர். அவ்வரசினர் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த தலைவனுக்கு ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொரு பசு உணவின்பொருட்டுக் கொடுக்கவேண்டுமென்று ஒருவிதியிருந்தது. இவர் தம்முடைய முறைநாளுக்கு முதனாள் இரவு அக்கொடுந்தொழிலைத் தாஞ் செய்வதிலும் பரதேசம் போய்விடுவது நல்லதென்றெண்ணித் தம்முடைய ஊரைவிட்டுப் புறப்பட்டுச் சிதம்பரத்தை யடைந்து சிவகாமியம்மையின் திருவருளைப்பெற்றபின் கௌடதேசம்போய் அங்கே சம்ஸ்கிருதங் கற்றுப் பின்திரும்பி

(தொடர்ச்சி 11 பக்கம்.)

# சைவமே சர்வசம்மத சமயம்!

## "சைவம்" என்றால் என்ன?

——:o:——

### சைவத்தின் லட்சியம் யாது?

[அகில இலங்கை இந்துமகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ. C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. செய்த தலைமைப் பேருரை.]

### முன்னுரை.

"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொற்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தியான் அவனென் கண்ணுளானே."

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத ஊரர்திருத் தாள்போற்றி."

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி."

அன்புடைப் பெரியீர்! அம்மைமீர்! ஐயன்மீர்!

இந்தியாவிலே எதோ ஒரு மூலையிலே இருந்த என்னைக் கடல் தாண்டி வரச்செய்து இலங்கையில் இந்தப் பெருஞ் சபையில் முன்னிற்கச் செய்து வைத்த உங்கள் அன்பின் பெருக்கத்துக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இலங்கைத் தீவும், அதிலும் சிறப்பாய் உங்கள் யாழ்ப்பாணமும் பல்லாண்டுகளாக என் மனத்திலே ஒரு தனியிடம் பெற்று விளங்கிவருகின்றன. இங்கு முன்னாளிலும் இந்நாளிலும் விளங்கும் பற்பல தமிழ்ச் சைவப் பெரியார்களும் என்னை அறியாமலே என் மனத்தைக் கவர்ந்து கொள்ளை கொண்டுள்ளார்கள். இங்கு வந்து உங்கள் யாவரையுங் கண்டு மகிழவேண்டுமென்ற அவா எனக்கு நெடுநாள் உண்டு. சென்ற 1924-ம் ஆண்டு கதிர்காமத் தல தரிசனத்திற்காக முதன்முதல் இலங்கை வந்தேன். அப்போது உங்கள் நாட்டுத் தேவாரம் பெற்ற திருத்தலங்களாகிய திருக்கேதீச்சரம்—திரிகோணமாமலை என்ற தலங்களையும், என்னை மறியாப் பருவத்தே எடுத்தாண்டருளிய முருகப்பெருமானுக்குகந்த சிறந்த கதிர்காமத் திருத்தலத்தையும் தரிசித்தேன். உங்கள் நாட்டுத் தலைநகராம் கொழும்பு நகரத்தையும் கண்டு சென்றேன். அப்போதே யாழ்ப்பாணத்தையும் உங்களையுங் கண்டு களிக்க எண்ணியதுண்டு. விடுமுறை நாட்கள் நெருங்கி விட்டமையின் அதுபோழ்து இங்கு வர இடமில்லை. ஆயினும் இதுகாலையிலேனும் உங்கள் பணி மேற்கொண்டு இங்கு வரும் பேறு கிடைக்கச் செய்தமைபற்றியும் எனக்கும் என்னைச் சார்ந்து வந்த நண்பர்களுக்கும் நீங்கள் செய்த உபசரிப்புக்களைப்பற்றியும் நான் மிகவும் நன்றிபாராட்டுகின்றேன்.

ஆனால் என்பால் என்ன குணநலங்கண்டு என்னைக் கைக்கொண்டீர்கள் என்பது எனக்குத் தோற்றவில்லை. நீங்கள் என்னை விரும்பி அழைத்த செயலை நோக்கும்போது,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்"

என்ற திருவாசகம் என் நினைவுக்கு வருகின்றது.

அன்பர்களே!

இன்று இந்த மகாசபையிலே பற்பல முக்கியமான பொருள்கள் பல பெரியோர்களால் பேச நிற்கின்றன. எனது முன்னுரையை நீட்டிக்கொண்டிருத்தல் நியாயமாகாது. ஆயினும் உங்கள் அமைச்சரவர்கள் சைவசித்தாந்தத்தின் முற்கால தற்கால பிற்கால வரலாறுகளைப்பற்றி என் முன்னுரையிற் சொல்லவேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். ஆதலின் அவைபற்றிச் சில வார்த்தைகள் சொல்வது அவசியமாகின்றது.

**சைவ சித்தாந்தம் யாது?:** "சைவ சித்தாந்தம்" என்பது சைவம் சித்தாந்தம்—என்ற இரண்டு மொழிகள் சேர்ந்த சொற்றொடர். இவற்றுட் சைவம் என்பது "சிவத்துடன் சம்பந்தமாவது" என்று பொருள்படும்.

"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது
சைவந் தனையறிந்தே சிவஞ்சாருதல்
சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமாமே."

என்றருளினர் திருமூலதேவநாயனர். "சைவம்" "சைவன்" என்ற சொற்களை உலக வழக்கிலே சாதாரணமாகப் புலால் உண்ணாமை; சைவ ஒழுக்கம், சைவ சமயம்:—புலால் உண்ணாதவன், சைவ ஒழுக்கத்தையோ சைவ சமயத்தையோ சார்ந்தவன்—என்ற பொருளில் வழங்குவர். இவை எல்லாம் அதற்குரிய சாமானியப் பொருளேயாம். சைவம் சிவத்துடன் சம்பந்தமாவது என்பதே அதற்குரிய சிறந்த பொருளாம்.

இனிச் "சித்தாந்தம்" ஆவது: முடிபு - தீர்மானம் - முடிந்த முடிபு - என்று பொருள்படும். எனவே சிவத்துடன் (உயிர்) சம்பந்தமாவது பற்றி அறிவு நூல்கள் கூறுகின்ற முடிபுகளே "சைவ சித்தாந்தம்" என்ற சொற்றொடரால் நாம் பெறும் பொருளாம். வேறு சமயச் சார்புகளுடனும் "சித்தாந்தம்" என்ற சொல்லைச் சேர்த்து உலக வழக்கில் வழங்கக் காண்கின்றோம். அவைபோல இதுவும் ஒன்று என்று எண்ணி வேறுபலவற்றுடன் சைவசித்தாந்தத்தையும் ஒன்றாகவோ, சமமாகவோ, பேசுவோரும் பலர் உளர். அப்படிப் பேசலாமோ? எனின், ஆகாது என்பேன். வேறு கொள்கைகளால் வெட்டப்பட்டுப் போகும் முடிபுகளுடன் அவ்வாறு பிறிதொன்றானும் வெட்டப்படாத முடிபையும் ஒன்று சேர்த்து "முடிபுகள்" என்று கூறுதலானது,

"மூவ ரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல்
தேவ ரென்றே யிறுமாந்து என்ன பாவந் திரிதவரே"

என்றது போலாகும். நியாயவழக்குக்களிலே ஒவ்வோர் நீதித்தலத்தின் முடிபும் அதனதன் முடிபு என்னப்பட்டாலும் முடிவான உயர்ந்த நீதிமன்றத்தின் முடிவே முடிந்த முடிபாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதுபோலவே ஏனைச் சித்தாந்தங்களைப்போலல்லாமல் சைவசித்தாந்தமானது வேறாய்த் தனிநிலையிலே முடிந்த முடிபை உணர்த்துவதாம். ஆகவே "சைவ" என்ற அடைமொழியில்லாது "சித்தாந்தம்" என்று தனிமொழியாற் கூறினும் இதற்குப் பொருந்துவதொன்றாம். அடைமொழியில்லாது "பூ" என்றால் தாமரைப்பூ என்று பொருளாகும். "ஈசுவரன் கோயில்" என்றால் "சிவன்கோயிலையே குறிக்கும். "பிள்ளையார்" என்றால் சிவபெருமானது மூத்த பிள்ளையாகிய விநாயகக்கடவுளையும், "குமரன்" என்றால் அவரது இளங்குமரனாகிய முருகக்கடவுளையும், "தேவி" என்றால் அவர் தேவியாகிய உமாதேவியையுமே குறிக்கும். இதுபோலவே "சித்தாந்தம்" என்ற சொல் சைவசித்தாந்தத்திற்கே செல்லும் என்க.

"சித்தாந்தம் வேதாந்தம் செம் பொருள் ஆதலால்
சித்தாந்தம் வேதாந்தம் காட்டுஞ் சிவனையே"

"வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

**சைவசித்தாந்தத்தின் வரலாறு.**

சிவபெருமானாகிய முழுமுதற்கடவுள் உயிர்களின்மேல் வைத்த அளவற்ற கருணையினாலே அவை உணர்ந்துய்யும் பொருட்டு அவைகளுக்கு அறிவைக் கொடுத்து அவ்வறிவால் அறிதற்பொருட்டு அறிவுநூல்களையும் அருளினர். அவையாவன: வேதங்களும் சிவாகமங்களுமே ஆம்.

"வேத மோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்பு மென் றுள்ளன"

எனவும்,

"வேதப் பயனுஞ் சைவமும் போல்"

எனவும்,

"வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம்"

எனவும்,

வருவன வாதி திருவாக்குகளால் இவற்றின் பொருத்தம் விளங்கும். வேதம் உலகர்க்கும் சிவாகமங்கள் சத்தினிபாதர்க்குமாக அருளிச்செய்யப் பெற்றன என்பர். வேதங்கள் அனந்தமாதலின் அவற்றை வடித்தெடுத்துச் சாரமாக்கி வேதாந்த சூத்திரங்கள் எழுந்தன. இவற்றிற்குச் செய்யப்பெற்ற பாடியங்களிற் சிறந்ததும் வேதங் கூறிய முடிவான சித்தாந்த உண்மைகளைக் காட்டுவதும் நீலகண்டாசாரியர் செய்த பாடியமேயாகும்,

இனி இவ்வுண்மைகளையே ஆகமங்களாகச் சிவபெருமான் நந்தி தேவருக்கு உணர்த்தியருளினர். சனகாதி நால்வருக்கும் இவற்றையே மற்றொருவகையாலே உணர்த்தியருளினர். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு வேறொருவகையாய் உபதேசித்தருளிய உண்மைகளும் இவையேயாம். இவ்வாறு நமது சைவகுருமரபிலே வழிவழியாக இவ்வுண்மைகள் உலகிலே வந்து வழங்கப்பெற்றபடி நாம் உணர்ந்து அறிந்து வருகின்றோம். இவையே "சித்தாந்தம்" எனப்பெறும். இவை பன்னிரண்டு சூத்திரங்களாகச் சிவாகமங்களில் ஒன்றாகிய இரௌரவாகமத்திலே பாவவிமோசனப்படலத்தில் அமைந்துள்ளன. சிவபெருமான் நமது குருமரபுக்கெல்லாம் முதற் குருநாதராகிய திருநந்திதேவருக்கு உபதேசித்த இவ்வுண்மைகளை அவர் வழிவழியே பரஞ்சோதிமாமுனிகள் உணர்ந்தனர். அவர் இந்நில உலகிலே திருவெண்ணெய் நல்லூரிலே எழுந்தருளியிருந்த சுவேதவனப் பெருமாள் என்ற மெய்கண்டதேவருக்கு உணர்த்தினர். அவர் தாங் கேட்ட அதனைத் தமிழ் உலகம் உய்தற்பொருட்டுத் தமிழிலே "சிவஞானபோதம்' என்ற முதனூற் பெயரையே பெயராக வைத்து மொழிபெயர்த்து வார்த்திகம் என்னும் பொழிப்புரையுடன் சில வெண்பாக்களும் இயற்றி ஒருநூலாகச் செய்தருளினர். இதுவே தமிழிலே சித்தாந்த சாத்திரங்களுக்கு முதல் நூலாகக் கருதப் பெறுவது. இவர் மரபிலே வந்த ஆசாரியர்களாலே ஏனைச் சித்தாந்த சாத்திரங்கள் செய்தருளப்பெற்றன. இவ்வாறு தொகுக்கப் பெற்ற சாத்திரங்கள் பதினன்காம். மெய்கண்டதேவர் இற்றைக்கு 710 ஆண்டுகளின்முன் வாழ்ந்தனர். ஆயின் நமது சைவசித்தாந்தம் இற்றைக்கு 700 ஆண்டுகளின் முன் வந்ததுதானோ? என்று சிலர் கேட்கலாம். பற்பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் கால வரையறை செய்து மகிழும் கால ஆராய்ச்சிக்காரர்களுக்கு 700 ஆண்டுகள் என்றால் மிகச்சிறுமையாயும் தோன்றலாம். ஏனைப் பௌத்த-கிறிஸ்த்தவ-முகமதிய சமயக்கொள்கைகளுக்கு வெகுகாலம் பிற்பட்டதாகவும் தோன்றலாம். அற்றன்று, இவர்களது மனித அறிவுக்குட்பட்ட கால எல்லைக்குள் கட்டுப்பட்டுநின்றுவிடுவதல்ல நமது சைவசித்தாந்தம்.

**சித்தாந்த சாத்திரங்கள் முதல்நூல்களா?**

சிவஞானபோதம் தமிழில் முதல்நூலா? அன்றி மொழி பெயர்ப்பா? என்ற ஒரு பெரும் ஆராய்ச்சி இப்போது கிளம்பியிருக்கிறது. அது இரௌரவாகமப் பொருளிற் கண்டவற்றின் மொழிபெயர்ப்பென்பதே, ஸ்ரீ. சிவஞானமுனிவர் முதலிய ஆன்றோர் கொள்கை இது நிற்க: அதற்குமுன்னேயும் தமிழிலே சைவசித்தாந்த நூல்கள் உளவா? என்று கேட்போமானால்,

"முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!"

என்ற இறைவனது இலக்கணம் அவனைப்பற்றிய சித்தாந்தத்திற்கும் பொருந்தும். நமது இறைவன் காலங்கடந்தவன். அவன் வேத சிவாகமங்களை அருளியதும் அவ்வாறேயாம். அவ்வாகமத் திறனெலாந் தெரிய உள்ளவாறு கேட்டருளிய நமது குரு மரபில் வரும் சித்தாந்தமும் அவ்வாறேதான். இன்ன காலத்து முளைத்தது என்று சொல்ல இயலாத பழம்பொருள் இதுவாம். தமிழிலே இவ்வுண்மைகளை எடுத்துச்சொல்வன இப்பதினன்கு சாத்திரங்கள்தாமோ? இவற்றிற்கு முன்னும் வேறு உண்டோ? எனின் திருமூலதேவர் அருளிய திருமந்திரம் தமிழ்ச் சித்தாந்த நூல்களிலே மிகப்பழமையானது என்று சொல்வேன்.

"அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற்றேனே."

"செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கும் அருணந்தி தாள்பெற்று
தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுபதுகோடி யுகமிருந்தேனே."

"மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே."

"இருந்தேனிக் காயத்தே எண்ணிலிகோடி
இருந்தே னிராப்பக லற்ற விடத்தே—"

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே."

என்பனவாதி அவரது திருவாக்குகளினால் நாம் அறிகின்றபடி இவ்வுலகில் திருவாவடுதுறையில் அரசமரத்தடியில் அநேககாலம் சிவயோகத்திலே அமர்ந்திருந்து திருமூலதேவநாயனர் இவ்வுண்மைகளைத் "திருமந்திரமாலை" யாக அருளிச்செய்தார். இந்நாயனர்,

"முன்னியவப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேன் மகிழ்ந்திருந்தார்"

என்று பெரியபுராணத்தால் அறிகின்றோம். ஓர்ஆண்டுக் கொன்றாக இம்மந்திரங்களை அருளினர் என்பதும் தெரிகின்றோம்.

ஒருவர் பல ஆயிரம் ஆண்டுகள் இருத்தலாவது? பல யுகம் இருத்தலாவது? இவையெல்லாம் வெறும் பொய்; கட்டுக்கதை என்பர் இந்நாள் நவீன ஆராய்ச்சியாளர். "நாள் என ஒன்றுபோற் காட்டி உயிர் ஈரும் வாள்" என்றபடி நாள் செல்லச் செல்ல ஆயுள் மேலேறிக் கழிந்து உடல் மூத்து மரணம் பழுப்பதை யோகசாதனையினால் தடுக்கலாம் என்ற உண்மையைத் திருமூலதேவர் "கூற்றை யுதைக்கும் குறியதுவாமே" முதலிய பல பிரமாணங்களால் உறுதியிட்டு அருளியிருக்கின்றார். இன்னும் பல பெரியார்களும் அவ்வாறே ஆணையிடுகின்றார்கள். இப்பொருள்களையெல்லாம் நமது குறுகிய சிற்றறிவாகிய அளவுகோல்கொண்டு அளந்துவிடலாகாது. காற்றில்லாவிட்டால் 7 நிமிடத்தில் இறந்துபடுவது மனித இயற்கையென்பது இக்கால முடிபு. ஆனால் காற்றும் வெளிச்சமும் இல்லாமல் பலமணிக்கூறு யாதொரு ஊறுமின்றி இருக்கும் பெரியார்களை நான் நேரில் அறிவேன். இது சித்தாந்த உண்மைகளில் ஒன்று. இது நிற்க,

திருமூலதேவநாயனர் இவ்வாறு அருளிய திருமந்திரமாலையானது பதி பசு பாசம் என்ற முப்பொருள்களின் இருப்பு இயல்புகளையும் பதியை யடையும் சாதனம் பயன் இவைகளையும் இன்னும் இவற்றைச் சார்ந்த எல்லாப் பொருள்களையும், விரிவும் தெளிவும் சுவையும் பெற எடுத்துரைப்பதாம்

"தண்ணிலவார் சடையார்தாந் தந்த ஆகமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ்வகுப்ப"

என்ற பெரியபுராணப் பிரமாணத்தாலே இதுவே தமிழில் சைவசித்தாந்தத்தை விளக்கும் முதனூலாம் என்றும் சொல்லலாம். இவருக்குப் பின்னும் மெய்கண்டதேவநாயனருக்கு முன்னும் வந்த சைவ சமயாசாரியமூர்த்திகளும் மற்றைப்பெரியார்களும் தேவாராதி திருமுறைகளிலே சித்தாந்த உண்மைகளைப் பொதிந்துவைத்து விளக்கியுள்ளார்கள்.

"ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாணகுண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே"
—திருஞான. திருவீழி: நட்டபாடை (2)

இது இறைவன் உலகத்தோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருக்கும் நிலையாகிய, சித்தாந்தத்துக்கே உரிய மேன்மைக்கருத்தை விளக்குகிறது.

"நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க் கறியும்அறி வருளி"
—திருஞான, இடும்பாவனம். நட்டபாடை (6)

"அவனருளாலே அவன்றாள் வணங்கி"

திருவாசகம் முதலிய திருவாக்குகள் அவனை அறிதலும் அவனருள் செய்தவழியே கைகூடும் என்பதும் உணர்த்துவன.

"ஓட்டிட்ட பன்மியின் உருந்திர பல்கணத்தார்"
—திருஞான. திருமயிலை. (1)

"உரைப் படுவாரோ டொட்டி வாழ்தி"
—வாகீசர். திருவாரூர்த் திருத்தாண்டகம் (1)

இவை போல்வன சிவன் முத்தர்களது சிவாத்துவிதக் கலப்பை விளக்குவன. திருவாலவாயிலே திருஞானசம்பந்தநாயனர் அருளிய திருப்பாசுரத் தேவாரத்திலேயும் பெரியபுராணத்திற் சொல்லிய அதன் வியாக்கியானத்திலேயும் சைவசித்தாந்த உண்மைகள் சுபக்கத்திலே வைத்து விரிக்கப்பெற்றன. திருத்தெளிச்சேரி தரிசித்துச் சென்ற திருஞானசம்பந்த நாயனாரைப் புத்தர்கள் வழியிலே வாதுக்கழைத்தபோது சுவாமிகள் முன்பு நடந்த பௌத்த மதவாதத்திலே பரபக்க மறுப்பும் சித்தாந்த விளக்கமும் செய்யப்பெற்ற வரலாறும் பெரியபுராணத்தால் அறிகின்றோம். இவ்வாறே பதி பசு பாச இயல்புகள் - சாதனங்களின் இயல்புகள் - பயன் இயல்புகள் யாவும் ஆங்காங்கே கண்டுகொள்ளலாம்; ஆயின் சித்தாந்தத்தின் முழு உண்மைகளையும் இலக்கணவகையாற் பாகுபாடு படுத்திக் காட்டும் சாத்திரங்களாக அமைந்துள்ளன மேலே கூறிய மெய்கண்டசந்தான சைவசித்தாந்த சாத்திரங்களேயாம். இவற்றின் பின்னர் இவற்றைப் பின்பற்றித் திருக்கைலாய மரபிலே திருவாவடுதுறை, திருத்தருமபுரம் முதலிய மடாலயங்களில் எழுந்தருளியிருந்த குருமூர்த்தங்களாலே இவ்வுண்மைகளிற் பலவற்றைச் சிறப்பு வகையால் விளக்கித் தசகாரியவிளக்கம் முதலாய பண்டாரசாத்திரங்கள் அவ்வப்போது செய்யப்பெற்றன.

**சித்தாந்த சாஸ்திரங்களின் அமைப்பும் நுதலிய பொருளும்:**

எல்லா உலகிற்கும் முதல்வனாய் நிற்கும் பேரருளாளனாகிய இறைவன் ஒருவன் உண்டு. அப்போதே அவனையடைந்து அவன் கருணையைப் பெற்று உய்யவேண்டியவைகளாய்ப் பாசபந்தப்பட்ட உயிர்கள் அனந்தம் உண்டு. இவ்வுயிர்களைப்பாசமானது அநாதியே கூட்டிக்கொண்டு அவைகளை அந்தகாரத்தில் அமிழ்த்தி நிற்கின்றது. விதித்த சாதனங்களாலே இப்பாசக்கட்டினின்றும் நீங்கி உயிர்கள் இறைவனை யடைதலே உறுதிப்பொருளாம். இப்பொருளைக் கைகூடச் செய்யும் துணையாவார் குருவும், அரன் அடியார்களுமே யாவர். இவ்வுண்மைகளையே சித்தாந்த சாத்திரங்கள் பாகுபாடுபடுத்தி விரித்துரைக்கும். இவற்றின் விரிவுகளை நல்லாசிரியர்கள்பாற் கேட்டு ஒழுகுதல் வேண்டும்.

இவை நுதலிய பொருள்யாது? இவற்றாற் பெறுபயன் யாது? என்னின்: ஒருவன் மயங்கிச் சிறைப்பட்டுக் கிடக்கின்றான். தான் சிறையில் அடைபட்டு இருப்பதையும் அறியாமற் கிடக்கும் அவனது மயக்கத்தைப் போக்கி, "ஏ! இது என்ன மயக்கம்! நீ வெளியே சென்று சுதந்தரத்துடன் இன்பமாய் வாழவேண்டியவன். அது தெரியாது இக் கொடுஞ்சிறையிலே அடைக்கப்பட்டுத் துன்பப்படுகிறாய். இச்சிறையிலிருந்து உன்னை நீக்கி வெளியில் விடக்கூடிய அதிகாரி ஒருவன் உண்டு. அவன் இன்னதன்மையன். அவனைத் தெரிந்து அவனிடம் உன்குறையைத் தெரிவித்தால் அவன் இச்சிறையினின்று மீட்டு உன்னைத் தன்னிடம் வைத்துச் சுகம் கொடுப்பான். அவனை அடையும் வழியிது. அடைந்தால் நீ பெறும் சுகம் இது" என்று ஒரு கருணையாளன் சொல்லி வழிகாட்டினால் எத்தன்மைத்தோ அதே போன்றதுதான் இச்சித்தாந்த சாத்திரங்களாற் பெறும் பொருளும் பயனும். இந்த ஒருசென்மத்திலே உடம்பைச் சிறைப் படுத்தும் உலகச் சிறைச்சாலைகளைப் பற்றியே இத்தகைய உதவி பெரிதும் போற்றப்படுவது இந்நாள் இயல்பு. சுயராச்சியம் - சுதந்திரம் என்ற பேச்சும், அதற்கான முயற்சியும் எங்கும் காணப்படுகின்றன. ஆனால் அவை எல்லாம் இவ்வொரு பிறப்பிலே அழிந்து போகக் கூடிய இவ்வுடம்புகளைப் பொறுத்தே எழுகின்றன. நமது அழியா உயிர் அனேகம் பிறவிகளிலே சிறையுட்பட்டு அலைவதை உடம்பின் சிறைக்காக உழன்று உழன்று நிற்கின்றது உலகத்தின் பேதமை.

# இலங்கை இந்துக்களின் எழுச்சி!

## சமய வாதம் வேண்டாம்.

:O:

## இந்துக்கள் நலத்தைக் காப்பதற்கு நிர்ணயங்கள்.

:O:

### முதன் முதற் கூடிய ஹிந்து மகாநாடு.

:O:

### மகாநாட்டு விவரம்.

முன்னரே அறிவிக்கப் பட்டபடி, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில், சென்ற வியாழக்கிழமை, காலை எட்டரைமணிதொடக்கம் ஓர் அகில இலங்கை ஹிந்துமகாநாடு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையிற் கூடியது. மகாநாட்டுத்தலைவராகிய ஸ்ரீ C. K. சுப்பிரமணியமுதலியார் B. A. மகரதோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்ட வீதிவழியே ஊர்வலமாக மகாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார். இலங்கையின் பலபாகங்களி லிருந்து பன்னூற்றுக் கணக்கான சைவநன்மக்கள் மகாநாட்டிற்குச் சமுகமளித்தனர். அத்துடன் கொழும்பு கதிர்காமம் தொண்டர் சபை, கொழும்பு விவேகானந்தசபை, மத்தியமாகாணச் சைவமகாசபை நாவலப்பிற்றியா இந்து வாலிபர் சங்கம், யாழ்ப்பாணம் வைசவசித்தாந்த சமாஜம், இலங்கை இராமக்கிருஷ்ண மடம் முதலாம் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் சமுகமளித்தனர். மண்டபத்தில் எழுந்தருளப் பெற்ற இடபாரூடருக்கு தேவாரம் ஓதிப் பூசைசெய்யப்பட்டபின், மகாநாட்டு வரவேற்புத் தலைவர் ஸ்ரீ S. சுவாமிநாதன் B. A. அவர்கள் தமது வரவேற்புப் பிரசாரணத்தை நிகழ்த்தினர். (அதனை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் காண்க)

வரவேற்புரை முடிந்ததும், தலைவரவர்களின் வரவேற்புப்பா திரு க.கி. நடராசா அவர்களால் படித்து உதவப்பட்டது.

மகாநாட்டுத்தலைவரான திரு C. K. சுப்பிரமணியமுதலியார் B. A. அவர்கள், தமக்கு இலங்கைச் சைவநன்மக்கள் சார்பாக அளிக்கப்பட்ட வரவேற்புக் கவிகளை வணக்கத்துடன் பெற்றபின் கேட்டோர் மனம் ஆனந்தபரவசமடையும்படி தமது தலைமைப் பிரசாரணத்தைச் செய்தார். அதனையும் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் காண்க.

தலைவர் பேருரை முடிந்ததும் ஸ்ரீ த. குமாரசுவாமிப்பிள்ளையின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் முற்றுப்பெற, பிரதிநிதிகள் யாவருக்கும் சைவ பரிபாலன சபையின் தலைவர் (இராசவாசல் முதலியார்) ஸ்ரீ A. நாகநாதர் அவர்களால் இந்துக்கல்லூரி விடுதிச்சாலை மண்டபத்தில் அறுசுவை யுடன் விருந்து அளிக்கப்பட்டது.

பிற்பகல் 3-30 மணியானதும் மகாநாட்டு நிகழ்ச்சி முறைப்படி தமிழ்மறை யோதப்பெற்று மகாநாடு ஆரம்பமாயது. "யோகக் காட்சி" என்னும் அரிய விஷயத்தைப் பிடிகையாகக்கொண்டு பரமேஸ்வரக் கல்லூரிப் பிரதமாசிரியர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை B. A., B. L., F. R. E. S., ஓர் சிறந்த சொற்பொழிவு செய்தார். மக்களின் உடற்கூறு எத்தகையது; புலன்கள் எத்தன்மை வாய்ந்தன; அவற்றை அடக்கி மனிதன் தனது லட்சியத்தை யோகத்தின் மூலம் அடையும் விதம் என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி எல்லாருப் வியக்கும்வண்ணம் திரு நடேசபிள்ளை, தெளிவாக 2 மணித்தியாலநேரம் பேசினர்.

இதன்பின், ஏழாலையிற் பிரபல வைத்தியரும், சைவசித்தாந்தியும், சைவநூலாராய்ச்சி வல்லுநருமாகிய திரு ஐ. பொன்னையா அவர்கள் "சைவநாற்பாதம்" என்னும் அரிய விஷயத்தைப்பற்றி எவரும் இலகுவிற் கிரகிக்கத்தக்கபடி பேசினர்.

இதன்பின் சைவப்பிரசாரகர் ஸ்ரீ த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் மூன்று ஆசாரியர்களும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பண்களின் அமைப்பு முறையைப்பற்றிப் பக்கவாத்திய சகிதமாக ஓர் சிறந்த சொற்பொழிவாற்றி எல்லோரையும் சங்கீதசாகரத்தில் ஆழ்த்தினர்.

எட்டுமணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் பூர்த்தியாயது.

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கே, மண்டபமெங்கணும் எள்ளிட இடமின்றிச் சைவநன்மக்கள் நிறைந்திருந்தனர். 9-15 மணிதொடக்கம் 9-30 மணிவரையில் ஸ்ரீ த குமாரசுவாமிப்பிள்ளை, வித்துவான் க. இராமலிங்கம், பண்டிதர் மாணிக்கத்தியாகராசா முதலியோர் தமிழ்மறை போதினர் 9-30 மணியளவில் ஸ்ரீ C. K. சுப்பிரமணிய முதலியாரின் அவைத் தலைமையில் பூசை செய்யப்பட்டபின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.

**கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலைப் பண்டிதர் ஸ்ரீ ம. வே. மகாலிங்கசிவம் அவர்கள் "வைதிக தாந்திரீக சைவம்" என்னும் விஷயத்தைப் பிடிகையாகக் கொண்டு ஓர் சொற்பொழிவு செய்தார். உலகத்திலே பல்வேறு மதங்கள் உண்டெனினும், சைவம் என்ற ஒன்றே, சிவசம்பந்த முடைய அம்மதம் ஒன்றே எல்லா மதக்கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு சர்வசமய சமரசம் பாராட்டுகின்றது என்று பிரசாரகர் பலபட விரித்துரைத்தபின், உயர்திரு: சுவாமி விபுலானந்தா அவர்கள் உமாபதி சிவாசாரியாரைப் பற்றியும் அவர் இயற்றிய சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த சாத்திரங்களைப்பற்றியும் பல அரியமேற்கோள்களுடன் ஓர்சிறந்த சொற்பொழிவு செய்தார்.**

(தொடர்ச்சி 6ம் பக்கம்.)

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

"திருவடி பரவுதும் யாமே, நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைந்தனம்; மறந்துஞ்
சிறைக்கருப் பாச யந்சோர்
மறித்தும் புகாது வாழ்வுபெறற் பொருட்டே" எனவும்,

"..............................முடங்கி யிருந்துழிப்
பாவப் பகுதியி லிட்டுக் காவற்
கோடியோ ரைவரை யேவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறன்பொருள் வெளவியும்
பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவரும் கடுப்ப அவாவது கூட்டி
சண்டின கொண்டு மீண்டு வந்துழி
இட்டுழி யிடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்!
நின்னை அடைந்த அடியார் அடியார்க்கு
என்னை அடிமை யாகக் கொண்டே
இட்ட பச்சிலை கொண்டு ஒட்டியறிவித்து
இச்சிறை பிழைப்பித்து இனிச்சிறை புகாமற்
காத்தருள் செய்ய வேண்டும்
சந்திரன் டன்ன செஞ்சடை யோனே" எனவும்,

முறையிட்டனர் கோடி பொன்னையும் ஒருநாவிலே துறந்த நமது பட்டினத்தடிகள். உலகத்திலே உடம்பின் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் நாம்,

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்"

அனந்த சென்மங்களிலே, உயிரின் சிறைவாசத்தை நீக்கிச் சுகம்பெற முயலுதல்வேண்டாமா? இம்முயற்சியில் உற்ற உபகாரம் செய்வன நமது சித்தாந்த சாஸ்திரங்களேயாம்.

"மாறும் காட்டி நெறிகாட்டி வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி யாட்" கொள்ளும் அவனைக் காட்டுவன இவையே.

சிறந்த உயிர் விடுதலையே கிடைக்குமானால், தாழ்ந்த உடம்பின் விடுதலை அதற்கு முன்னே வெகு விரைவில் இலகுவாகக் கிடைத்துவிடு மன்றோ? இதனைக் கொடுக்கும் சித்தாந்தத்தைவிட்டு, உலகத்தைக் கட்டிக்கொண்டிருப்பது ரூபாவை விட்டுச் சதத்தைத் தேடுவதுபோலவே முடியும்.

தமது துன்பங்களையும் மாட்டாமையையும் உணர்ந்து உலக நிலையை விட்டுச் சற்றுமேலே எட்டிப்பார்த்து, தனக்கு மேற்பட்ட ஒருசத்தி உள்ளது என்று கண்டு வணங்கும் முறை ஆதிகாலந்தொட்டு சர்வசம்மத சமயம் எல்லாமனிதர்க்குள்ளும் நிகழ்ந்து வருவதொன்றும். அவ்வாறு மலையும் - கடலும் - மழையும் பிறவும் வணங்கப்பட்டன. பாம்பு முதலிய உயிர்களையும் வணங்கினர். இவ்வகையிலே காணப்பட்ட பொருள்களையன்றி, இவற்றிற்கு மேலாய்க் கண்ணுற் காணப்படாது மனிதரை ஆட்டுவிக்கும் சத்தியுடைய பொருள்களும் உண்டு என்ற எண்ணமும் நெடுங்காலமாக மனிதர்க்குள் நிகழ்ந்து வருவதேயாம். இவையே பற்பல நாட்டிலும் பற்பல சமயமத பேதங்களை நாட்டுவதற் கேதுவாயின. மனிதன் தன்னின் மேம்பட்ட பொருளின் துணைகொண்டு துன்ப நீங்கி இன்பமான உயர்நிலையடைவதே எல்லாச் சமயங்களின் உள்நோக்கமாயின், அவை தம்முள் வேற்றுமையும் போராட்டமும் நிகழ்ந்து உலகமாந்தரை அலைப்பானேன்? எனின்,

"சமய வாதிகள் தந்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்"

"பேதித்த சமயமோ ஒன்று சொன்னபடி யொன்று
சொல்லாது" என்றபடி சமய முடிபுகளும் இயல்புகளும் ஒன்றற்கொன்று முரண்படுவனவேயாம். யானையின் காலையும் வாலையும் காதையும் கையையும் தனித்தனி தொட்டு அறிந்த குருடர், அதனதன் மட்டில்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.

வைத்தியசாலை
பெரியகடை, யாழ்ப்பாணம்.
தகுதிவாய்ந்த
சிறந்த டக்ரர்களால்
எந்தநேரத்திலும்
இலவசமாக
ஆலோசனை அளிக்கப்படும்.
மருந்து கலப்பதில்
மிகத் திறமையும் அநுபவமும்
படைத்தவர்களாலேயே
மருந்து கலந்து கொடுக்கப்படும்.
(Mis. 174. 25-12-33to4-1-34.)

## இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம்

—:0:—

இன்று நிகழும் ஆருத்திர தரிசனத்தின் பொருட்டு இந்துசாதன ஆலயம் விடுதலை செய்யப்பெற்று இரு பிரசுரங்களும் வெளிவராது தவிர்க்கப்படுதலே நியதியானதால், அங்ஙனஞ் செய்து, இந்த மகாநாட்டு விசேஷ பிரசுரத்தைப் பிரசுரித்து தமிழ்ப்பத்திரிகை அபிமானிகளோடு ஆங்கிலப்பத்திரிகை அபிமானிகட்குந் தவறாது அனுப்பியிருக்கின்றோம்.

மனேஜர்.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் ஸ்ரீமுகவருஷ மார்கழிமீ" 18உ திங்கட்கிழமை.

## அகில இலங்கை இந்துமகாநாடு.

சென்ற வியாழன் (28) வெள்ளி (29-12-33) என்னும் இரு தினங்களிலும், நமது சைவபரிபாலன சபையாரின் ஆதரவில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி மகாநாடு சமைய விஷயமாக இங்கே புத்தூக்கத்தைப் பிறப்பித்தற்கு ஏதுவாயுள்ளது எனலாகும். இதற்கு முன்னரும் இங்கே காலந்தோறும் பல மகாநாடுகள், சங்கங்கள், சமாஜங்கள், சபைகள் கூட்டப்பெற்றமையும் பிரசாரணங்கள் நிகழ்ந்தமையும் இன்னபிறவும் உண்மை இப்பொழுதும் சமயசம்பந்தமான சமாஜங்கள் சங்கங்கள் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன இப்படியே கொழும்பு கண்டி முதலாம் பட்டினங்களிலும் காலந்தோறும் சமயவிருத்தி விஷயமாக மகாநாடுகள் சமாசங்கள் கூட்டப்பெற்று வந்தன; வருகின்றன. ஆனால் அவைகளெல்லாம் அந்த அந்த ஊர்கள் அளவிலே நின்று நிலவுவனவாம். ஆனால் அப்படியான மகாநாட்டில் அடையக்கூடிய பயன்கள் இலங்கையின் ஏனைய பாகங்களில் வசிக்கும் சைவ நன்மக்களுக்கும் பயன்படுதலுண்டென்பதை நாம் மறக்கவில்லை

எனினும், இப்பொழுது கூட்டப்பெற்ற இந்த அகில இலங்கை இந்து மகாநாடு இலங்கையிலுள்ள சைவ மக்கள் எல்லோரையும் சமய சம்பந்தமான எல்லாச் சபைகள் சங்கங்கள் சமாசங்கள் மகாநாடு முதலாம் இவைகளை ஒன்று கூட்டவும், அங்ஙனம் ஒன்று கூட்டி இச் சைவ நன்மார்க்கத்தைப் பேணிப் பலப்படுத்தி, இனிது விருத்தி பண்ணவும் நோக்கங்கொண்டு இம்மகாநாடு கூட்டப்பட்டதென்பதை "அகில இலங்கை இந்து மகாநாடு" என இதற்கு இடப்பட்ட நாமத்தைக் கொண்டே எவரும் சிறிது யூகித்து அறிதல் முடியும். இப்பொழுது கூட்டப்பெற்ற இம்மகாநாடு பெரும் பான்மையும் அநுகூலமுற்றதென்றே நாம் சொல்லலாகும் இந்த மகாநாட்டின் நோக்கங்கள் நிறைவேறுவதும் முயற்சிகள் நடைபெறுதலும் இங்குள்ள சைவநன்மக்களின் தாளாண்மை, அபிமானம், சிரமத்தைப் பொருட்படுத்தாமை, உதாரத்துவம் என்னும் இவைகளைப் பொறுத்தவாம். சமயாபிமானம் சமயாநுஷ்டானம் ஈசுரபக்தி ஒழுக்கம் என்னுமிவைகளில்லாமையினாலேயே, இவற்றை நாம் கைவிட்டமையினாலேயே, இப்பொழுது பலவகையான அநர்த்தங்களும் விபரீதங்களும் மடிமை மிடிமைகளும் எங்கட்குச் சகசமாய் விட்டன என்பதை நாம் இப்பத்திரத்தில் ஒருமுறையன்று இருமுறையன்று பலமுறை எடுத்து வெளியிட்டுள்ளோம். ஆனதால் இவ்வகையான தீமைகளை அகற்றுவதற்கும் சைவ மார்க்கத்திற்கு அசிரத்தையாலேனும் அந்நிய மதத்தினாலேனும் விபரீத கொள்கை பூண்டாராலேனும் இடையூறுகள் நேருமானால் அவற்றைத் தடுத்து நஞ்சமயத்தைப் பாதுகாப்பதற்கு இப்படியான ஒரு மகாநாடு ஆவசியகம் வேண்டும்.

இனி, இச்சபையார் தாம் முதன் முதற் கூட்டியதாகிய இம்மகாநாட்டிற்கு அக்கிராசனாராககோபமழ்ந்தார், சைவத் திருவாளர் C K சுப்பிரமணிய முதலியாரவர்களைத் தெரிந்து அழைத்தமையும், அப்பெரியார் இவர்களுடைய வேண்டுகோட் கிணங்கித் தமது சிரமம் அரியநோய் முதலியவற்றைப் பொருட்படுத்தாது இங்கு வந்து அவைத்தலைமைவகித்தமையும் உண்மையில் ஆராயுமிடத்து இம்மகாநாடு இன்னமும் நீடித்த காலத்திற்கு மேலான விருத்திபெய்தி இவ்விலங்காதீபத்திலுள்ள சைவ நன்மக்கட்குப் பெரும் பயன்தருமென்பதற்கு அறிகுறியாகும். நமது முதலியாரவர்கள் சைவசாஸ்திரங்களையும் புராணேதிகாசங்களையும் இலக்கண இலக்கியங்களையும் இன்னபிற நூல்களையும் சந்தேகவிபரீதமற ஆர்வத்தோடு கற்றுள்ளவரென்பதும் தேவாரம் திருவாசகம் ஏனைய அருட்பாக்கள் தேவகுறள் முதலாம் இவைகளைப் பத்திபோடு பாராயணஞ் செய்துள்ளாரென்பதையும் சமயகுரவர் சந்தானகுரவர் பட்டினத்தார் அருணகிரிநாதர் தாயுமானவர் முதலாம் மகான்களிடத்து இடையறு அன்பு பூண்டுள்ளவரென்பதையும், சிவபத்தியிற் சிறந்தவரென்பதையும் சைவாசாரம் அநுட்டானம் ஒழுக்கம் தோன்மை என்னுமிவற்றிற் கைவந்தவரென்பதையும், சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் கட்டுரை வன்மை முதலாம் அழகுகளோடு கூடியவரென்பதையும் தம் கடன் சிவத்திற்கும் சைவத்திற்குந் தொண்டுசெய்து கிடப்பதேயென்னுங் கொள்கை பூண்டவரென்பதையும், இவைகளெல்லாவற்றிலும் விசேஷமாக சிவபரத்துவத்தை அடியார் மகத்துவத்தை எடுத்துச் சொல்லும்போது மனம் நெக்கு நெக்குருகுதல் கண்ணீர் ததும்புதல் நாத் தடுமாறுதல் இடையிடையே பரவசப்படுதல் முதலாம் பக்தியின் பயனாகிய செயல்கள் தம்மிடத்தில் நிகழப் பெற்றவரென்பதையும் அச்செயல்களால் தாம் சொல்வனவற்றை எவரும் மனமுருகக் கேட்டுத் தம் மனத்திற் பதிக்கச்செய்யும் ஆற்றலுடையாரென்பதையும் எவற்றை தாம் போதித்தாரோ அவற்றைத்தாம் அநுஷ்டானஞ் செய்யும் மேலாந் தன்மையுடையவரென்பதையும் காலமுமிடனும் வாயிதினைக்கிப் பேசும் தகமையுடையாரென்பதையும் இன்னபிற சுகுணங்களும் சத்கருமங்களுமுடையவரென்பதையும் இந்த இரண்டுநாளும் அவருடைய பிரசங்கங்களையும் குறிப்புரைகளையும் அவரையும் முறையே நேரிற் கேட்டவர்களுக்கும் கண்டவர்களுக்கும் தெற்றென அறியலாகும். அவர் பிரசங்கங்களை இப்பத்திரிகை வாயிலாகவும் பிற ஏதுக்கள் வாயிலாகவும் படிப்போரும் இவற்றை அறிதல்முடியும். சுருங்கச் சொல்லுமிடத்து இப்பெரியாரே இப்படியான சமய சம்பந்தமுள்ள மகாநாடு சமாசங்களிற் றலைமை வகிக்கத் தக்கவரென்பதற்குச் சந்தேகமில்லையாம். எல்லாம் வல்ல இறைவன் தமது மேலான தொண்டை இவ்வுத்தமர் செய்யும்படி இவருக்கு அரோக திடகாத்திரத்தையும் ஏனைய சாதனங்களையும் நீடித்த ஆயுளையும் ஈந்தருளுவாராக.

மேலும், இந்த இந்துமகாநாட்டின் கொள்கை சைவசமயத்தை ஓங்கச்செய்து, இடங்கள்தோறும் தனித் தனி இருக்கும் சமயசங்கங்கள் சபைகள் சமாசங்களை ஐக்கியப்படுத்தி இங்குள்ள சைவ நன்மக்களெல்லாரையும் நமது சமயாபிவிருத்தியின் பொருட்டு ஒத்து உழைக்கச் செய்வதும் ஆகிய இவைகளே என்பதை மேலே எடுத்துக் கூறியுள்ளோம். இவை மாத்திரமல்லாமல் ஏனைய சமயத்தை சமயவாதிகளைக் கண்டித்தல் நிந்தித்தல் அவர்களோடு பகைமை பாராட்டுதல் முதலிய விபரீத செயல்கள் இம்மகாநாட்டில் இல்லாமை இதற்கு ஒரு விசேஷ அம்ஸமாகும்.

ஒரு கருமத்தை மங்கலமாக ஆரம்பித்தால் அக்கருமம் பாதி நிறைவேறியதற்குச் சரியாம் என்னுங் கருத்தமைந்த ஒரு முதுமொழி ஆங்கிலத்திலுண்டு அஃதேபோல் இம்மகாநாடும் மங்கலமாக ஆரம்பிக்கப்பெற்றிருத்தலின் இப்பொழுதே பாதி அநுகூலம் பெற்றதாய் இன்னுஞ் சிலகாலத்தில் சைவசபை சங்கங்கட்கும் ஸ்தாபனங்களுக்கும் சமயவளர்ச்சிக்கும் இன்னபிற சற்கருமங்கட்கும் சாதனமாய் நின்று தலைமை வகித்துத் தொண்டாற்றி நிலவுமென்பதே எமது நம்பிக்கை

## கலியாணம் தடைப்பட்டதால் தற்கொலை முயற்சி.

சிங்கள நாட்டைச் சேர்ந்த கெகோனு கெகனு எனும் இடத்தில் வசித்த 17 வயதுடைய வாலிபன் ஒருவன் சென்ற புதன்கிழமையன்று தெஞ்சில் அபாயகரக் காயத்துடன் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டான்.

மேற்படி வாலிபன் விவாகஞ் செய்ய அவாவுற்றான் என்றும், 17 வயதில் விவாகம் ஆகாதென்று அவன் தாய் தடுத்தமையால் அவன் மனஸ்தாபங் கொண்டு தற்கொலை செய்ய முயற்சித்தான் என்றும் இப்போது தெரிகிறது.

## இலங்கை இந்துக்களின் எழுச்சி.

(5-ம்பக்கத் தொடர்ச்சி.)

இதனையடுத்து கொழும்பு விவேகானந்த சபைச் செயலாளரான ஸ்ரீ சேவ.தா சி சிவகுருநாதன் அவர்கள் பின்வரும் தீர்மானத்தை எடுத்தாண்டார்:-

"இலங்கையிலுள்ள இந்துக்களின் சமூக சமய வாழ்க்கையைப்பற்றிய உறுதியான அபிப்பிராயங்களை வெளியிடும் பொருட்டு, இந்நாட்டின் பல பாகங்களிலுமுள்ள இந்து சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அகில இலங்கை மகாசபையை நிறுவுதற்கான பிரயத்தனங்களைச் செய்யுமாறு இவ்வகில இலங்கை இந்து மகாநாடு யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையாரைக் கேட்டுக்கொள்ளுகிறது."

இத்தீர்மானத்தை மத்திய மாகாணச் சைவ மகாசபைப் பிரதிநிதியான ஸ்ரீ சி. கவிராயபிள்ளை அவர்கள் அநுவதிக்க, அது சர்வசன சம்மதமாக நிறைவேறியது.

தேவார பாராயணத்துடன் கூட்டம் முடிந்ததும் சபையோர், இந்துக்கல்லூரி வித்தியாசாலை மண்டபம் சென்று, சைவபரிபாலன சபைக் காரியதரிசிகள் ஸ்ரீ பொ. இராசகோபால், ஸ்ரீ. V. நாகலிங்கம் B A என்பவர்கள் அளித்த விருந்தருந்தினர்.

பிற்பகல் 3 மணியானதும், சபையோர் முன்போல மகாநாட்டு மண்டபத்தை யடைந்தனர் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது.

நியாயதுரந்தரர் ஸ்ரீ S. நாகலிங்கம் அவர்கள் பின்வரும் தீர்மானத்தை எடுத்தாண்டார்.

'இலங்கையிலுள்ள இந்துப் பாடசாலைகளில் உபயோகிப்பதற்காக, தமிழில் படிமுறையாக வகுக்கப்பட்ட தகுதியான சமய பாடபுஸ்தகங்களை ஆக்குவதற்கு அறிவாளிகளைக் கொண்ட ஓர் சபையைத் தாபித்து அதற்கேற்ற முயற்சிகளைச் செய்யுமாறு இவ்வகில இலங்கை இந்து மகாநாடு யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது."

இத்தீர்மானம் தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ கா. சின்னப்பா அவர்களால் அநுவதிக்கப்படச் சர்வஜன சம்மதமாய் நிறைவேறியது.

காரைநகர் ஸ்ரீமத் செல்வத்திருநாததேசிகர் அவர்கள் "சைவசமயமும் சைவக்கிரியையும்" எனும் விஷயமாகப் பேசினார். சைவசமயிகளுக்கு வேதாகமங்களில் விதிக்கப்பட்ட கிரியைகள் இப்போது மேனாட்டாராலும் விதந்து போற்றிக் கைக்கொள்ளப்படுகின்றனவென்றும், அவற்றின் நோக்கம் பரிசுத்தமானவை யென்றும் திரு. தேசிகர் அவர்கள் விளக்கினார்.

தேசிகரவர்களின் விரிவுரைக் கூடின அவைத் தலைவர் ஸ்ரீ C K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'திருக் கூட்டம்" என்னும் விஷயமாகப்பேசினார் இறைவனது திருக்கூட்டத்தில் "அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" அவர் எம்பெருமானுக்கு அன்பராகில், அவரும் திருக்கூட்டத்தில் வைத்து எண்ணப்படவேண்டுமென்றும், சைவர்களுட் சாதிச்சைவர் சமயச்சைவர் என இருபகுப்பு உண்டென்றும் தகுந்த மேற்கோள்களுடன் எடுத்து விளக்கினார்.

இதன்பின் ஸ்ரீ முதலியார் தம்மை இங்கு வரவழைத்து உபசரித்த சைவபரிபாலன சபையாருக்கு நன்றி கூறினர்.

சைவபரிபாலன சபையார் தமைப் பிற்கினங்கி தமது காலநேரத்தையும் தேக சிரமத்தையும் பொருட்படுத்தாது இங்கே வந்து சைவமணம் கமழச்செய்து, உறங்கிக் கிடந்த சைவ மக்களைத் தட்டியெழுப்ப ஏதுவாயிருந்ததற்குச் சைவபரிபாலன சபையார் சார்பாக நியாயவாதி ஸ்ரீ கா. அருளம்பலம் அவர்களும் T. N. சுப்பையா அவர்களும் தலைவருக்கும் பிரசாரகர்கட்கும் இம்மகாநாட்டிற்குத் தம் பிரதிநிதிகளை அனுப்பிய சங்கங்களுக்கும் நன்றி கூறினர். கூட்டம் 6-15 மணிக்கு தேவார பாராயணத்துடன் சமாப்தியாக தலைவர் அவர்கள் உடனே தமது ஜெயக தேசத்திற்குப் பிரயாணமாயினர்.

# தமிழ்மொழி வளர்ச்சிக்கு வழி.

## பாஷாபிமானக் குறைவுக்குக் காரணம்.

[சென்ற சனிக்கிழமை (23-12-33) சென்னை பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் நிகழ்ந்த தமிழ் அன்பர் மகாநாட்டில் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கம்]

(25-12-33-ன் தொடர்ச்சி.)

தமிழ்மக்கள் தங்கள் தங்கள் ஜீவனத்துக்குரிய பலவகை முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் யாவரும் சிறந்த இலக்கியங்களைப் படித்து இன்புறுதலென்பது இயலாத காரியம். புதிய செய்திகளோ கொள்கைகளோ இக்காலத்திற் பத்திரிகைகளின் மூலமாகவே பரவுகின்றன. பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கம் இப்போது அதிகரித்து வருகின்றது. ஆதலின் தமிழ்ப் பத்திரிகையை நடத்துகிறவர்கள் தங்களுடைய கடமையை நன்றாக உணர்ந்து தேசாபிமானத்தையும் பாஷையின் தன்மையையும் கருதித் தமிழ்ப் பயிற்சியுள்ளவர்களை உடன் வைத்துக்கொண்டு உழைத்து வருதல் தமிழகத்துக்குப் பரோபகாரமாக இருக்கும். எந்தப் பொருளும் அதற்குரிய லக்ஷணங்களுடன் அமைந்திருந்தால்தான் அதனை நாம் மதிக்கிறோம்; இல்லையாயின் வெறுக்கிறோம். பாஷை விஷயத்தில் மட்டும் அந்தக் கொள்கைக்கு விலக்கு உண்டென்பது முறையாகாது.

சில வருஷங்களுக்கு முன்வரையில் தமிழின் நிலைமை மிகச் சிறப்புடையதாகவே இருந்தது. அரசாட்சி மாறுபாடுகளிலும் கால வேறுபாடுகளிலும் தமிழ்ப்பாஷைக்குக் குறைபாடு நேரவில்லை. மகமதியர் முதலியவர்களுடைய அரசாட்சியிற் கூடத் தமிழ் மொழிக்குரிய சிறப்பானது குறையவே இல்லை. பிற்காலத்திலும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய இடங்களிலுள்ள மடங்களும், சேது சமஸ்தானம் முதலிய சமஸ்தானங்களும் தமிழ் வித்துவான்களை ஆதரித்துத் தமிழ் வளர்ச்சிக்குரிய காரியங்களைச் செய்து வந்திருக்கின்றன. இந்த ஆங்கில அரசாட்சியில் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் பாஷையின் அபிவிருத்திக்குரிய உதவிகள் பலவற்றைச் செய்து வந்தும், நம்மவர்கள் பலவகையான தக்க உத்தியோகங்களை வகித்து நாட்டின் நலத்துக்கு உரிய காரியங்களைச் செய்யும் நிலையில் இருந்தும், நூல்கள் பரவுதற்குரிய அச்சு முதலிய சாதனங்கள் மலிந்திருந்தும், தமிழ் நூற் பயிற்சி இப்போது மாறுபட்டிருப்பதுபோல வேறு எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்த நிலைமையைப் போக்குவதற்குரிய வழிவகைகளைப் பற்றி இங்கே உள்ள அறிஞர்கள் ஆராய்ந்து, செய்கையில் நடைபெறக் கூடியவற்றை மேற்கொண்டால் நலமாயிருக்கும்.

தமிழ்நாட்டார் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் தமிழ்ப்பாஷையையே உபயோகிக்கவேண்டும். ஆங்கிலம் அறிந்தவர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலத்திலே நினைக்கிறார்கள்; அவர்களால் ஆங்கிலச் சொற்கள் கலவாமற் பேச முடியவில்லை. இத்தகைய நிலை ஒரு பெருங் குறையல்லவா? ஆங்கிலம் படித்தவர்களிற் பெரும்பாலோர் கடிதங்களைத் தமிழில் எழுதும் பழக்கத்தை அடியோடே விட்டுவிட்டார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாகவும் மற்றவர்கள் வியக்கும்படியாகவும் பேசியும் எழுதியும் வருகிறார்கள். அம்முயற்சியையே தாய்மொழியிலும் கொள்ளுதல் முதற் கடமையன்றோ? ஜி. யூ. போப் முதலிய வேறு நாட்டினர்கள் கூடத் தமிழின் இனிமையை உணர்ந்து அறிவுள்ள பழைய நூல்களை மிக உழைத்துப் படித்து அறிந்து மகிழ்ந்திருக்கிறார்கள்; தமிழ்ப் பயிற்சி உள்ளவர்களுக்கு அவர்கள் வழிகாட்டியும் வந்திருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் அத்தகைய முயற்சிகளைச் செய்யவேண்டிய அளவு செய்யாமல் இருக்கிறோம். ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் தமிழிற் பேசப் பழகிவிட்டால் தங்களுடைய கருத்தை நன்றாக வெளியிட முடிகிறதென்னும் எண்ணம் உண்டாகிறதென்று சொல்லுகிறார்கள். ஆதலின் அச்செயலை யாவரும் விடாமல் மேற்கொள்ளுதல் நலம்.

தமிழ் நூல்களைத் தக்க அறிஞர்களைக் கொண்டு வெளியிட முயற்சி செய்யவேண்டும். ஒருவர் மேற்கொண்ட முயற்சியையே பலர் மேற்கொண்டு உழைப்பதைக்காட்டிலும் பலவகை முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்தால் தமிழ் பல துறையிலும் விருத்தியடையும். ஒருவர் உழைப்பினாற் செய்த ஒன்றையே பல வேறு வகையிற் கைக்கொண்டு பல உருவத்தில் தம்முடைய உழைப்பின் பயனாக வெளியிடுதல் முறையாகாது. தமிழ் அறிஞர்கள் தங்களுடைய ஆற்றலைத் தனித்தனியே காட்டும் முயற்சிகளைச் செய்யவேண்டும்.

பண்டைக்காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் தமிழ்க் கணிதவகைகளையும் நிகண்டுகளையும் இன்றியமையாத இலக்கிய இலக்கணங்களையும் கற்பித்து வந்தனர். பழைய முறைப்படி பாடங் கேட்டவர்களுக்கு அவை உபயோகமுள்ள நூல்களாக இருந்தன. சங்க நூல்கள் வரையில் அவர்கள் தங்கள் பயிற்சியை முறையாகவே வளர்த்து வந்தனர். அந்த முறை இப்பொழுது அடியோடு போய்விட்டது. அதனாற்றான் பாஷையில் அபிமானமுங் குறைவுபட்டது.

முறையாகப் பாடஞ் சொல்லுதலும் பாடங்கேட்டலும் மலிந்திருந்த காலத்திலேதான் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய பெரும் புலவர் இருந்தனர் என்பதை நாம் எண்ணவேண்டும். அவர்களைப் போன்றவர்களை இக்காலத்திற் பார்க்கவே முடியாது. இப்பொழுது பாஷை உள்ள நிலையில் இனியும் பார்த்தல் அரிதெனத் தோற்றுகிறது. நூல் முற்றும் படித்து அறிவதற்குள் ஆராய்ச்சிகளையும் அபிப்பிராயங்களையுஞ் சொல்லத் தொடங்கும் இயல்பு இக்காலத்தில் வளர்ந்து வருகிறது. நாம் படித்ததே போதுமென்ற திருப்தியும் பலருக்கு உண்டாகின்றது. சில நூல்களைப் படித்த பயிற்சியினால் விரிந்துள்ள தமிழ்ப் பாஷையிலேயே திருத்தம் செய்ய அவர்கள் முற்பட்டு விடுகிறார்கள்.

பாடஞ் சொல்லுதலின் அவசியத்தை நன்றாகத் தமிழ்நாட்டார் உணரவேண்டும். பாடங் கேட்பதால் அறிந்துகொள்ளும் பல அரிய இரகசியங்களை எவ்வளவு சிறந்த அறிவுடையவராக இருப்பினும் தாமாகவே படித்து அறிந்துகொள்ள இயலாது. முறையாகப் பாடங்கேட்டவர்களுக்கும் தாமே படித்தவர்களுக்கும் எந்தக் காலத்திலும் வித்தியாசம் இருப்பதைக் காணலாம்.

எந்தத் துறையில் நாம் ஒரு முயற்சியைச் செய்யத் தொடங்கினாலும் அந்தத் துறையில் வல்ல அறிஞர்கள் சிலரையேனும் வைத்துக்கொண்டு அதனைச் செய்விக்கவேண்டும். எல்லோரும் எல்லாவற்றையுஞ் செய்வதென்பது அநுபவ சாத்தியமானதன்று.

சங்ககாலத்திலும் பிற்காலங்களிலும் பலவகையில் வேறுபாடுடைய புலவர்கள் தமிழ்வளர்ச்சிக்குரிய முயற்சியில் தங்கள் வேற்றுமைகளை மறந்து மனம் ஒன்றி உழைத்தார்கள். சைவர்களும், வைஷ்ணவர்களும், ஜைனர்களும், பௌத்தர்களும், பிறரும் ஒருங்கிருந்து தமிழாராய்ந்திருக்கின்றனர்; இதுவரையில் வேறு விஷயங்களில் இருந்த பேதங்கள் மொழிவளர்ச்சிக்குத் தடை செய்ததில்லை. இந்தக் காலத்திலோ யாதொரு காரணமுமின்றித் தேசம், சாதி, சமயம் முதலியவற்றிலுள்ள கொள்கை வேறுபாட்டைப் பாஷா சம்பந்தமான முயற்சியிலும் சிலர் புகுத்திவருவது மிகவும் வருந்துதற்குரியது. மன ஒற்றுமையின்மையினால் எந்தக்காரியமுஞ் செய்ய இயலாதாதலின் பல திறப்பட்ட அறிஞர்களும் ஒன்றுகூடி ஒற்றுமையாகப் பழகித் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

நமக்குப் பல தமிழ் நூல்களை இயற்றியளித்த புலவர்களையும் அவர்களுடைய அருஞ்செயல்களையும் நாம் மறவாமல் அந்தந்தப் புலவர்களுடைய நாட்களைக் கொண்டாடி வரவேண்டும்.

மதுரையில் சேதுபதி வேந்தர்களைத் தலைவர்களாகக் கொண்டு விளங்கும் தமிழ்ச் சங்கமும், சென்னைச் சர்வகலாசாலையும், அண்ணாமலைச் சர்வகலாசாலையும், தனவைசியர்களுடைய சில நகரங்கள் முதலியவற்றிலுள்ள கலாசாலைகளும், இத்தமிழ்நாட்டிலும் இலங்கையிலுமுள்ள வேறு சில சங்கங்களும் தமிழ் வளர்ச்சியைக் குறித்துப் பல தொண்டுகளைச் செய்துவருகின்றன. தமிழறிஞர்களிற் சிலர் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனர். இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர்களாகவுள்ளவர்கள் தமிழறிவின் வளர்ச்சியைக் கருதி நிலையான தருமங்களைச் செய்துவருதல் யாவரும் பாராட்டுதற்குரியது.

தமிழ் வளர்ச்சியின் திறத்தில் மேற்கொள்ளக்கூடிய துறைகள் இன்னும் பல இருக்கின்றன. செல்வர்களும் அறிஞர்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் ஆற்றலைக்கொண்டு செய்யத்தக்க காரியங்களைச் செய்தால் தமிழ்நாட்டிற்குப் பேருதவியாக இருக்கும்.

இதுகாறும் நான் தெரிவித்தவற்றுள் உசிதமாகத் தோற்றுவனவற்றை ஏற்றுக்கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன்.

இங்கே வந்துள்ள தமிழன்பர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தினால் அறிந்த குறைகளை வெளியிட்டுத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரிய செயல்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழன்பர் மகாநாடு கூடியதன் நோக்கம் நன்கு நிறைவேறவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்,"

### மோட்டார் விபத்து.

அமெரிக்காவில் கர்த்தர் தினத்தன்று ஏற்பட்ட மோட்டார் விபத்துக்களின் பயனாக 180 பேர்வரை மரணமடைந்தனரென்று ஓர் செய்தி கூறுகிறது.

### கிறிஸ்தவகுரு கொலை செய்யப்பட்டார்.

வட அமெரிக்காவின் பிரதமகுருவான லியோன் என்பவர் தேவாலயத்தில் ஆராதனை செய்யும்போது சில துஷ்டரால் சென்ற மாதம் 24ம் தேதியன்று வெட்டிக் கொலை செய்யப்பட்டாரென்று ஓர் செய்தி கூறுகிறது.

### 199 பேர் மரணம்.

பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த பரிஸ் நகருக்கும் நான்ஸி நகருக்குமிடையே ஓடும் புகைரதமும் இன்னோர் புகைரதமும் கத்தார்த் திருநாளன்று ஒன்றோடொன்று மோதியமையினால் அவற்றிற் பிரயாணஞ்செய்தவர்களில் 199 பேர் இறந்தனர். பன்னூற்றுக்கணக்கானோர் கால்கைகள் ஒடியப்பெற்றனர்.

### நாலு பிள்ளைகளைப் பிரசவித்தவள் கதி.

இனுவில் ஆஸ்பத்திரியில் இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் ஓரே பிரசவத்தில் 4 பிள்ளைகளைப் பெற்ற பொன்னன் மனைவி சென்ற வியாழக்கிழமையன்று இறந்தாளென்று அறிகிறோம். பிறந்த சிசுக்களிலும் இரண்டு இறந்துவிட்டன. மற்றை இருசிசுக்களுஞ் சுகமேயிருக்கின்றன.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமூஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாண், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்மூனி விதை, சாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் சீரிழிவு, சீர்க்கட்டு, சீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிக்கும் பக்ஷவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ஒருத்தல் நிறைக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. காலருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு
(Y 27. 31-12-33) ஜில்லா.

---

மகாராஜ தத்துவ
சாலாமிஸ்ரி லேகியம்.
ஒரே வேளையில் ஆண்சிங்க மாஸீர்கள்.

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும் லேகியம் சாப்பிட்ட ஒருமணிநேரத்தில் பலத்தை கொடுக்கும் இந்த லேகியத்தைப் பலரோகும் பல பெயருக்கும் கொடுத்து நாம் கண்ட குணங்களாவன:

நாடி நரம்பு, தாதுக்களின் பலக்குறைவு, என்புக்குடு, வீரியநஷ்டம், நரம்புத தளர்ச்சி, சதா இடுப்பு வலி, நெஞ்சுவலி, நெஞ்சடைப்பு, மலச்சிக்கல், பசிமந்தம், பிதநாதியக்க உஷ்ண வாய்வுகள், கிருமி ரோகம், தூர்ச்சியாதிகள், சரீரத்தில் ஓடித்திரியும் பற்பல வாய்வு ரோகங்கள், விரைவாதம், பாண்டு, சோகை, மைசாலசதி, கைகால் எரிவு, கண்ணெரிவு, மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவிர்த்தியாகி தேக உஷ்ணதலைச் சமப்படுத்தி நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து எவர்க்கும் வீரிய உற்சாகத்தைக் கொடுத்துப் புத்திர சம்பன்னராய் வாழச் செய்திருக்கிறது.

40 நாள் 80 வேளை டின் ரூ. 10-0-0
20 நாள் 40 வேளை டின் ரூ. 5-0-0
10 நாள் 20 வேளை ரூ. 2-12-0

ஹக்கீம் V. A. றஜாக் கம்பனி,
பறங்கிப் பேட்டை, (S. A. Dt.)

(Y. 142. 20-11-33to19-11-34)

---

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

# S. S. "கோகிரு" (Gogra)

என்னும் புகைக்கப்பலில்

பேர்பெற்ற **"பவுண்மார்க்"** ஓடுகள்

இன்னும் ஒருவாரத்துள்

யாழ்ப்பாணம் வந்துசேரும்.

நேரே துறைமுகத்திற்றுனே வந்து வாங்குபவர்களுக்கு

விசேஷமான சகாயங் கிடைக்கும்.

இத்தருணத்தையும் வசதியையுந்

தவறவிடாதீர்கள்

எஸ். வீரகத்திப்பிள்ளை ஆ ஸன்ஸ்,

யாழ்ப்பாணம்.

(Y. 3. 26-4-34).

---

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின் முதன்மையானதும்
சிறந்ததுமான திவ்விய ஔடதம்.
மிருகக்கொழுப்புக் கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

(Y 18. 11-2-33—10-2-34.)

---

இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்

# 100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
Y. 12—7-5-34

---

"காண்டிநேண்டல்"
கம்பெனியின் தொழில்
வருமானம் Rs. 1,500,000.
ஜீவிய நிதியில் சேருங்கள்.
மாதம் ரூபா ௨.
10 வருஷத்தில் ரூபா. 500
ஆதாயம் பெறுவீர்கள்.
ஏழைகளும் செல்வரும்
விரும்பக்கூடிய கம்பெனி.
கிளை ஆபீஸ்கள்: சாவகச்சேரி, கண்டி, மட்டக்களப்பு.
E. P. புலூஸ், உடுவில், மானிப்பாய்,
இலங்கைப் பிரதம பரிசோதகர்,
(H. 77. 17-8-33 to 16-2-34.)

அமைந்து அவ்வவ் அவயவங்களை முழுயானை என்று கொண்டனர் எனும் கதை போலவே இதுவும் முடியும். யானை முழுமையும் கண்டறிந்த கண்ணுடையான் போலச் சைவசித்தாந்தமானது அவ்வச் சமயக் கோட்பாடுகளை எல்லாம் கண்டு அவற்றோடு அமைந்து நின்று விடாது, அவை எல்லாம் அவ்வவற்றின் தரத்தில் சென்று அவயவங்களாய் ஒவ்வோர் பகுதியில் அடங்கி நிற்கக் கூடிய உண்மைப் பொருளின் முழுப்பிண்டத்தையும் கண்டு உணர்த்துகின்றது.

"நீதியினுல் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றது யாதொருசமயம் அதுசமயம்"

என்பது இதுவே.

முதற்கண்ணே—'தெய்வமேயில்லை, காண்கின்ற உலகமேயுள்ளது; அதன் அனுபவங்களாகிய உண்ணல்—உடுத்தல்—பொருந்தலாதி இவைகளே உள்ளன" என்று கூறுவன் இக்கால நாகரிகனும், முற்கால உலகாயதனும். இவனை நோக்கி "ஏ! உலகனே! மக்களிறெனும் அவாவும், கல்வி என்னும் பல்கடலும், செல்வமென்னும் அல்லலும், நல்குரவு என்னும் தொல்விடமும், இன்னும் இவைபோன்ற புல்வரம்பாய பலதுறையும் உன்னை அலைக்க, பின்னர் ஒருக்கால் நீ அவற்றினின்று தப்பிப்பிழைப்பாய். அப்போது, உனக்குந் 'தெய்வமென்பதோர் சித்தமுண்டாகும்.' அன்றியும், நீ இல்லையென்கின்ற உணர்ச்சியோடு கூடிச் சொல்லும் 'தெய்வம்' என்றதனுற் குறிக்கப்படும் பொருள் உளதாகும்: நீ குறிக்கும் உலகமும் அதன் அனுபவங்களும் உண்டு. ஆனுல், அப்பாற்பட்ட பொருளும் உண்டு" என்று அவனுக்குச் சித்தாந்தம் அமைதிகூறி மேற்செல்லும். இனிப்புத்தியே எல்லாவற்றையும் செயிப்பது—புத்திவான் பலவான்—புத்தியே பொருளாம் என்று ஒருவன் சொல்வான். அவனை நோக்கி "ஆம். அது ஒரு உயர்ந்த படிதான்—ஆனுல் அதற்கு மேலும் பலபடிகளுண்டு" என்று அழைத்துக்காட்டும் நமது சாத்திரம். இவ்வாறே எல்லாம் காண்க. ஆயின், பரபக்கத்திலே வைத்து ஏனைச்சமயக் கோட்பாடுகளைச் சித்தாந்தம் மறுக்கலாகாதே? என்னின்; ஆகும் என்பேன்: என்னை? 5 சதம், 10 சதம் முதலியவை முழுரூபாவின் தானத்தை விரும்பித் தாமும் ரூபாதாமே என்னுமேயாகில் "அல்ல அல்ல: நீவிர் எம்மில் ஒரு பகுதியில் அமைவீரேயன்றிப் பண்ட மாற்றிலே எம்முடைய முழுமதிப்பும் பெறமாட்டீர்" என்று ரூபா சொல்லும். இவ்வியல்பினவே சைவசித்தாந்தத்திற் கண்ட மறுப்புக்களுமாம்.

ஐவகை எனும் பூதமாதியைவகுத்து அதனுள்
அசராசர பேதமான
யாவையும் வகுத்துநல் அறிவையும் வகுத்து
மறையாதி நூலையும்வகுத்துச்
சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங்கடந்த மோன
சமரசம் வகுத்த நீ"

என்றெல்லாம் நமது பெரியோர் கூறுகையினுலே எல்லாச்சமயக் கோட்பாடுகளும் இறைவன் வகுத்தனவேயாம் என்பது நமது சித்தாந்தம். ஆயின், இவ்வாறு பல முரண்பாடுகளை வகுத்து மனிதரைப் போராடவைப்பது இறைவனது கருணைக்கிணங்குமோ? என்றால், மனிதர்க்குள்ளே பல பேதமும் திறமும் பக்குவமும் உண்டு. ஒருவர்க்கானது மற்றொருவர்க்காகாது. "ஒருவனுக்குச் சோறு; மற்றவனுக்கு நஞ்சு" என்பது ஆங்கிலத்தில் கூட ஒரு பழமொழியாம். பெரியோர்க்கான உணவைக் குழந்தைகள் உண்டால் இறந்துபடும். குழந்தையின் உணவோடு பெரியான் அமைந்துநின்றால் போதிய உணவின்றிச் சாவான். இதுபோலவே இறைவனது உலகமாகிய பெருவீட்டிலே உள்ள எல்லாருக்கும் ஏற்ற ஏற்றபடி உயிருக்கான உணவும் அமைக்கப்பெற்றுள்ளது. எல்லா உயிர்களும் கடவுள் சன்னிதானத்திலே நன்றே—சமமே: கடவுள் எல்லாரையும் ஒன்று போலவே பார்க்கிறார் என்பது உண்மைதான். ஆனுல் அதன் பொருள்என்ன? யானை முதலாய் எறும்பு ஈறாக உரைச்சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதங்களுட்பட்ட எல்லா உயிர்களின் பேரிலும் கடவுள் தம்கருணையை வரையாது செலுத்துவாராயினும் பாம்பை வளர்க்கின்ற வகையாலே பசுவை வளர்க்கின்றாரா? புல் வாய்க்காக அமைத்த படியே புலிக்கும் அமைத்தாரா? இல்லையே. இங்கே சமபார்வை என்பது அவ்வவற்றின் கர்மத்திற்கும் பக்குவத்திற்கும் அறிவிற்கும் ஏற்றபடி வேண்டுவனவற்றைத் தருதலேயாம். அறிவுடையார் சிலர், அறிவில்லார் பலர் என்றதை உணராது "பெரும்பான்மையோர் அபிப்பிராயம்" என்ற தவறான கொள்கை உலகிற் பரவும் இக்காலத்தே இது பொருத்தமற்றதாய்த் தோற்றுவது இயல்பு. கடவுள்முன் எல்லாரும் ஒன்றுதான்—ஆனுல் ஒருவர்க்கொருவர் வேற்றுமைதான்: இவ்வேற்றுமையில் ஒற்றுமையும் உண்டு. இவ்வாறு ஒற்றுமையில் வேற்றுமையும், வேற்றுமையில் ஒற்றுமையும் கண்டொழுகுதலே அறிவு. ஆகவே குழந்தைப்பருவமுள்ள உயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்றபடி முதற்பாட புத்தகம் போன்ற சமயக்கோட்பாடுகள் வைத்தார். மேற்படியாளர்க்குத் தக்கபடி மேன்மேற் படிகள் அமைத்தார். இதுவே சித்தாந்தத்தின் அழகும் அமைப்புமாம். இதுபற்றியன்றே

"சோபான பரீசங் காட்டி,
மோனமோலி அபரவரச் சென்னியில் வைந்து,
ஓராஜாங்கத் தமர்ந்த வைதிகசைவம் அழகிது"

என்று பெருமிதத்துடன் அருளினுர் பெரியார். சைவத்தின் இத்தகைய அடிப்படையான அருள் அடிநிலையின் பெருமைநோக்கியன்றே இக்காலினும் புறச்சமயிகளும் ஏனையோரும் சாத்விக உணர்வின் உரிமையைச் சைவத்துக்கே கொடுத்துச் "சைவச்சாப்பாடு" என்று சிறப்புப் பெயரால் அழைத்துவருகின்றார்கள். இது உடலுக்கு உரியவா புணர்வுக்கே யன்றி உயிர்வளர்ச்சிக்குரிய சமய உணவுக்கும் பொருந்தும்.

சித்தாந்தத்தின் மாபும் இக்கால பிற்கால நிலையும்.

ஒருநாட் பிறந்து, சிலநாள் இருந்து, ஒருநாள் இறக்கின்றவனுகிய மனிதன் அவ்வாறு பிறந்து பிறந்து உழன்று உழன்று இறந்து படுவதற்காகவே அவனுக்கு இப்பிறவி கொடுக்கப்படவில்லை; பின் எதற்காக என்றால்,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்ந்தச் சென்னியும் தந்த தலைவன்"

என்றார் நமது அப்பர் சுவாமிகள்.

மானிடப் பிறவி:

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக் காயத்து
ஆனிடந் தைந்துமாடும் அரன்பணிக் காகவன்றே"?

என்று வினுவின் மூலம் தேற்றம் பெற ஊன்றக் காட்டிற்று நமது சாத்திரம்.

"தலையே நீ வணங்காய்"

"கண்காள் காண் மின்களோ"

"செவிகாள் கேண் மின்களோ"

"நெஞ்சே நீ நினையாய்"

என்று எல்லாம் பிரித்துப் பிரித்து ஒவ்வோர் மனித அவயவங்கட்கும் வேலைகளை வகுத்துக் காட்டியது வாகீசத் திருவடிகளது சருணைத் திருவாணை. இவ்வேலைகளைச் செய்து உயிர்கள் மூலநோய் நீங்கிச் சிவத்தை அடைதல்வேண்டும் என்பதே சித்தாந்தம். ஆயின் அதற்கு உரிய சாதனங்கள் எவை? சித்தாந்தம் சில சாதனங்களை வகுக்கின்றது; அவை குருவும் ஐந்தெழுத்தும் ஆலயமும் அடியார்களும் பிறவும் ஆம்.

"சைவப் பெருமைத் தனிநா யகன்நந் தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்து வைத்தானே."

என்பது திருமந்திரம்.

**குருவும் கோயிலும் மடமும்**

சிவமே குருவென்றும் குருவே சிவமென்றும் பேதமறப் பார்க்கின்றது நமது மரபு. மாணிக்கவாசக சுவாமிகள் குருவைச் சிவமாகவே வழிபட்டார். அவர் ஆணைப்படி யாத்திரை செய்து தரிசித்த ஆலயங்களிலே சிவலிங்கத் திருமேனிகளிலே குருவடிவத்தையே கண்டு தரிசித்துச் சென்றார்.

"அந்தண னுவதுங் காட்டி வந்தாண்டாய்"
"கணக்கிலாத் திருக்கோல நீ வந்து காட்டினுப் கழுக்குன்றிலே"

என்பனவாதி திருவாசகங்கள் காண்க. திருமூல தேவர் சிவகுரு தெரிசனம் - குருமட தெரிசனம் என்று அதிகாரங்கள் வகுத்தனர்.

"சிந்த மிசையே சிவகுரு வாமே"

"சொல்லார்ந்த சற்குரு சுத்த சிவமே"

என்பனவாதி திருமந்திரங்கள் அனந்தமுள்ளன; சிவஞானப் பால் உண்டு, திருஞானசம்பந்த நாயனுர் அருளிய "தோடுடைய செவியன்" என்ற தமிழ்மறையும், அருள் பெருகு சூலையினுல் ஆட்கொள்ளப்பெற்ற வாகீச மூர்த்திகள் அருளிய "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற தமிழ் மறையும், கிழ வேதியனுகி வல் வழக்கிட்டு ஆட்கொள்ளப்பெற்ற சுந்தரமூர்த்தி நாயனுர் அருளிய "பித்தா பிறைசூடி" என்ற தமிழ் மறையும் ஒன்று போலவே குருவருளை விளக்கின எனத் "தோடு கூற்றுப் பித்தா மூன்றும் பிடுடைத் தேசிகன் பேரருள் ஆதும்" என்ற பெரியாரவாக்கு அறிவிக்கின்றது. குரு குருமூர்த்தமாய் எழுந்தருளியிருப்பது குரு மடமாகும். குரு, சிவனுய் எழுந்தருளியிருப்பது சிவாலயமாம். சித்தாந்தம் இவற்றை ஒன்றுகவே காண்கிறது.

**திரு ஐந்தெழுத்து**

ஐந்தெழுத்து என்ற சாதனம் மிகச் சிறந்த மந்திரமாம். அதுவே பஞ்சாக்கரம் எனப் பெறும். அது, காரணம் சூக்குமம் முதலிய பலதிறப்பட்ட வகைகளாற் பேசப்பெறும். இதன் வகை தொகைகளையும் உள்ளீடுகளையும் நிற்குமுறை ஓது முறைகளையும் சற்குருமாரிடம் உபதேசக்கிரமத்திற் கேட்டு உணர்ந்து கொள்ள வேண்டுவதன்றி இப்பேச்சிலே பேசத்தக்கதன்று.

**அடியார்கள்**

அடியார்களிடத்தே சிவம் விளங்க வீற்றிருக்கின்றார். இவர்களைத் திருமூலதேவர் "நடமாடுங் கோயில் நம்பர்" என்றருளுகின்றார். இவர்கள் கூட்டமானது சாதனமும் பயனுமாயிருத்தல் பற்றி இவர்களை "இகத்தும் பரத்தும் இனியார்" என்று எடுத்துக்காட்டுகின்றார் சேக்கிழார் சுவாமிகள். "சிவனடியார்களைச் சிவனென்றே வழிபடுக" என்பது சித்தாந்தம். திருக்காளத்தியப்பரைத் தரிசிக்கும் திருஞானசம்பந்த நாயனுர் அவரது வலப்பால் நிற்கும் கண்ணப்பதேவரைக்கண்டார். எப்படிக் கண்டார் எனின், நாதரைக் கும்பிட்ட பயன் காண்பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டார் என்பது புராணம்.

"உள்ளத்திற் றெளிகின்ற மெய்ம்மை யன்பின்
உருவினையும் அவ்வன்பின் உள்ளேமன்னும்
வெள்ளச் செஞ்சடைக் கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன் கண்டார்". மகிழ்ந்தெழுந்து பல

முறையும் வணங்கினர். இறைவனை அடையத் துணைபுரிகின்றார் அடியார்களும் குருமார்களுமேயாம்.

"சிவனை வழிபட்டாரெங் கெண்ணிலி தேவர்
அவனை வழிபட்டங் காமாறொன் றில்லை
அவனை வழிபட்டங் காமாறு காட்டும்
குருவை வழிபடிற் கூடலுமாமே" - என்பது திருமந்திரம்.

இவ்வாறு உள்ள இச்சாதனங்களை இப்போது நாம் என்ன நிலையில் வைத்துக் காண்கிறோம்? முகமதிய குருமார், கிறிஸ்தவ குருமார், பௌத்தகுருமார் முதலியவர்களை இந்நாட்டிலும் பிறநாட்டிலும் காண்கின்றோமே! அவர்கட்கு அவ்வச்சமயங்களிலே என்ன உயர்ந்த நிலை தரப்பட்டிருக்கின்றது! சிவ சமானமாக - சிவமேயாகக் காணவேண்டிய நம்குருமார்கள் எங்கே? அவர்களது திருமடங்கள் எங்கே? திருமுறைகளும் சாத்திரங்களுமெங்கே? புத்தக உருவமாகப் பலப்பல காண்கின்றோமேயன்றி உண்மை உபதேச உருவமாக - உண்மையனுபவ உருவமாக - உண்மைச்சாதனை நிட்டை உருவமாக அவற்றைக் காண்கின்றது அரிதினும் அரிதாய் விட்டதே!

திருவாலவாயில் திருஞான சம்பந்த நாயனாரும் அடியார் கூட்டமும் எழுந்தருளிய திருமடத்திலே சமணர்கள் தங்கள் விஞ்சை மந்திரத் தொழிலாலே தீக்கொளுவ முயன்றார்கள். அது சிறிதும் பலிக்க வில்லை.

"ஆதிமந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும், மாதிரத்தினும் மற்றை மந்திர விதி வருமே"! என்று பெருமிதம் பெற எடுத்துக்காட்டுகிறார் சேக்கிழார் பெருமான். பேய்கோட்பட்ட ஒருவன்முன் இருந்து கொண்டு அவனை நோக்கிப் பஞ்சாட்சர செபஞ் செய்தபோது அப்பேய் "நான் இனி இங்கு இருக்க வில்லை; போகிறேன்" என்று வாய்விட்டுப் பயணஞ் சொல்லிக் கொண்டு போயின உதாரணத்தை நான் அறிவேன். இந்தத் திருவைந்தெழுத்து இப்போது நம்மில் எங்கே எம்மாதிரி இருந்து வருகின்றது? நாம் அதை எம்மட்டில் உணர்ந்து எண்ணிவருகின்றோம்? இருபத்தாறு எழுத்துக்களையே எண்ணிவரும் நமக்கு ஐந்தெழுத்துக்கள் மிகை என்பது நம்மனோர் வாழ்க்கைத்திறமாய் விட்டது. ஆலயங்கள் அனாவசியம், திருவிழாக்கள் ஆடம்பரச் செய்கை என்று கூறுபவரும் சைவர்கள் என்போர்களில் உண்டு.

"ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்"

"......தொல் கார்த்திகைநாள்.........

விளக்கீடுகாணாதே போதியோ பூம்பாவாய்"

"ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்"

"தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்றெல்லாம் நமது ஆசாரிய மூர்த்திகள் மண்ணினிற்பிறந்தார் பெறும்பயனாய் எடுத்துக்கூறிப் பிரமாணமாய் நிரூபித்துக் காட்டிய திருவிழாக்கள் நமக்கு வெறும்பேச்சும் விளையாட்டுமாய்க் கழிகின்றன. இறைவனுக்கு அபிடேகஞ் செய்யும் பால் முதலியவற்றையும், அலங்கரிக்கும் ஆடையாபரணங்களையும் ஆன்மாக்களுக்கு உதவினாற் புண்ணியமாம் என்பாரும் பலர் நம்முள் உண்டு. நமது தெய்வத் திருமுறைகளையும் சாத்திரங்களையும் தமது குடுக்கை மூளைகொண்டு ஆராய்ச்சி என்று பேரிட்டுக்கொண்டு இதுவாகும், அது அல்ல என்று பிணங்கிநிற்பாரும் நம்முள் உண்டு. சாத்திர விசாரம், ஐந்தெழுத்தெண்ணுதல், குருதரிசனம், ஆலயந்தொழுதல், அடியார்பணி என்பனவாதி விதிக்கப்பெற்ற செயல்கள் நமது எண்ணத்தை விட்டுக் கூடப் பெரும்பான்மை அகன்று விட்டன. சாத்திரங்களும் மடங்களும் ஆலயங்களும் புறக்கணிக்கப்படும் அலங்கோலம் நல்லோர் மனத்தைப் புண்படுத்துகின்றது. இவையெல்லாம்,

"ஈறான கன்னி குமரியே காவிரி
வேறு நவதீர்த்தம் மிக்குள்ள வெற்பேழுள்
பேறான வேதா கமமே பிறத்தலால்
மாறாத தென்றிசை வையகம் சுத்தமே"

"எங்ஙனும், பூசனைக்குப் பொருந்து மிடம்பல
பேசி லத்திசை ஒவ்வா பிறதிசை"

என்று பெரியோர் எடுத்துப் பேசிய எங்கள் இந்தியத் தென்னாட்டிலே நான் காணும் காட்சி. ஆனால், உங்கள் இலங்கையோ எனில் முன்னாட்பல பெரியோர்கள் வாழ்ந்த இடம். அஃதன்றி, இந்நாளினும் சமயப் பற்று விடாத அநேகம் பெரியோர் இங்கு வாழ்கின்றதை இம்மகாசபையே கண்கூடாகக் காட்டும். உங்கள் இலங்கையைச் சிவபூமிகளில் ஒன்றாகச் சிறப்புறக் கூறியருளினார் திருமூலதேவர்.

"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமில் வானி லிலங்கைக் குறியுறும்
சாருந் திலைவனத் தன்மா மலயத்தூடு
ஏறுஞ் சுழுமுனை யிவை சிவ பூமியே"

"இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுமுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பராமாம் பரமே"

ஆயின் மேலே காட்டியவாறு உள்ள எங்கள் இந்திய நாட்டுத் தொடக்குகள் சிவபூமியாகிய உங்கள் நாட்டிலும் வந்து பாவியிருக்குமோ? அல்லது இக்காலத்து நாகரிக மென்ற பேரால் வழங்கும் கோரங்கள் உங்கள் நாட்டிலும் பாவியிருக்குமோ? நான் அறியேன். அவ்வாறிருக்குமேயாகில், அன்பர்களே! அவற்றை எல்லாம் அகலத்துரத்தி விடுங்கள்! நமது சித்தாந்த மரபிலே கண்ட குரு - ஐந்தெழுத்து - மடம் - ஆலயம் - அடியார் - வெண்ணீறு முதலிய சாதனங்களை மனமார வாயாரக் கையார ஏற்றுக் கைக்கொண்டு பரவச்செய்யுங்கள் என்று உங்களை நான் மன்றாடிக்கேட்டுக் கொள்கின்றேன். திருநீறு சிறந்த சாதனமாய்; மிகப் புனிதஞ் செய்வதாம்.

"பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"

என்பது பெரியபுராணம். "மந்திரமாவது நீறு" என்றதனித் திருப்பதிகத்தாலே தமிழ்மறை இதனைத் துதிக்கின்றது. இதன் பொலிவு இக்காலத்திலே நம்மவர்க்குள் அருகி வருவது காண என்மனம் நடுங்குகின்றது.

பூதிசாதன விளக்கம் போற்றல் பெறு தொழிபக் கண்ட சிவபாதவிருதயர், உலகத்தின் பொருட்டுத் தவஞ்செய்து நமது பரம ஆசாரிய மூர்த்திகளாகிய திருஞான சம்பந்த நாயனாரைப் பெற்றனர். ஆனால், அக்காலத்தை விட இக்காலம் மிகக்கொடுமை வாய்ந்தது என்று சொல்லவும் துணிகின்றேன். திருநீற்றினிடம் நமது நெற்றிகள் பெரும்பாலும் விடைபெற்றுக் கொண்டன; கண்மணிகள் நமது கழுத்துக்களை அலங்கரிக்கவில்லை; நமது திருமுறைகளும் சாத்திரங்களும் நமது மாடங்களிலே இடம் பெறாவாயின. "பைபிள்" இல்லாத கிறித்தவ வீடும், சர்ச்சுக்கு ஞாயிற்றுக்கிழமை செல்லாத கிறித்துவரும் நாம் காண்பதரிது; ஆனால், நமது சாத்திரங்களும் கோயில்களும் நம்மைக்காண ஏக்கம் பிடித்து நிற்கின்றன. தேவாரமாதி திருமுறைகளால் புனிதமாக்கப்பெற வேண்டிய நமது வாய்கள், தின்னாதவற்றைத் தின்னவும் பன்னாதவற்றைப் பன்னவுமே பயன்படுவனவாயின. ஒரு நாளில் இறைவன் கொடுக்க இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு பதினாடிள் கூட அவருக்கு ஒப்புவிக்க நமது உலோபமனம் இடங் கொடுக்கவில்லை. உலகம் என்ற பேய் நம்மை முழுதும் பற்றிக்கொண்டது. கீழல்லாத நமது கீழ் நாட்டை மேலல்லால் மேல்நாடாக்கிக் கண்டு மகிழ்ந்து நிற்கின்றோம்.

அன்பர்களே! இதுகாறும் சித்தாந்தத்தின் இயல்பும் முற்கால தற்கால நிலையும் பற்றிச் சில சொன்னேன். இனி வருங்காலத்திற் செய்யவேண்டியவை அவற்றினின்றே கிடைக்கும். அவை உங்களையும் இந்த மகாசபையாரையும் சைவ உலகத்தையும் பொறுத்தன. முழுப்பு தற்றன்மையால் உலகம்பரந்த சைவத்தை உண்மையாகவே உலகம் பரந்த தாகச் செய்தல் நமது கடமை. இதற்குக் காசும் பணமும் வேண்டாம். மனமே வேண்டும். முகமதுநபி அவர்களின் உபதேசங்களை முதன்முதற் கைக்கொண்டது அவர் மனைவியாருஞ் சுற்றத்தாருமாம். கிறீஸ்து நாதரின் ஆதிசீடர்கள் பன்னிருவரேயாவர். இவர்கள் கொள்கைகள் இப்போது எங்கும் விசாலமாய்ப் பரவவில்லையா? அதுபோலவே, நாமும் நமது சமயக் கடவுளை நமது மனைவிமக்கள், உற்றார், பெற்றார், நண்பர், பணியாளர் முதலியவர்களுடன் தொடங்கி மேற் செல்வோம். சிறுவர் சிறுமியர் கட்டாயம் சமயபாடம் கற்க.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக;
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

என்ற நமது பரமாசாரியாரது ஆசி மொழிகளைக் கடைப்பிடித்து மேற்சென்று ஒழுகி உய்வோமாக. சைவக் கூட்டங்களும், சைவப் பேச்சும் ஒழுக்கமும் பெருகுக. ஆலயங்களும் நம் சேவையால் அழகு பெறுக. அன்பர்களே! என் முன்னுரை நான் எண்ணியதை விட அதிகம் நீண்டுவிட்டது. இதோடு அதனை நிறுத்திக்கொள்கின்றேன். இதிற் காணுங் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன். உங்கள் அன்புக்கு மீண்டும் நன்றி செலுத்துகின்றேன்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்"

வந்து திருவண்ணாமலையாதீனத்திற் காஷாயம் பெற்றிருந்தனர். இவர்சம்ஸ்கிருதத்தில் சிவஞானபோதவிருத்தி, பௌஷ்கரவிருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை பிரசாததீபிகை, அஞ்ஞானவிவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்நம், சிவாகமாதி மகான்மிய சங்கிரகம் என்னும் நூல்களும் தமிழிற் சிவஞான சித்தியாருக்கோர் உரையுஞ் செய்தனர். சிதம்பரத்திலுள்ள "ஞானப்பிரகாசம்" என்னுங்குளம் வெட்டுவித்தவரும் இவரே.

போர்த்துக்கேசருக்குப் பின்வந்த ஒல்லாந்தரும் சனங்களைப் பலாத்காரப்படுத்திக் தம்மதக் கொள்கைகளைப் பரப்பினர். அவர்கள் யாழ்ப்பாணத்தை 32 கோயிற் பற்றுக்களாகப்பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு கலாசாலையும் ஒவ்வொரு கோயிலுங் கட்டிக் கல்வியையும் சமயத்தையும் தங்கொள்கைக் கிணங்க வளர்த்து வந்தார்கள்.

19-ம் நூற்றுண்டில் இலங்கை ஆங்கிலேயருக்கானது. அதனுற் சைவர்கள் சமய சுயாதீனமடைந்தார்கள். ஆயினும் சமயத்துக்கு உறுதுணையான கல்விவிஷயத்தில் இடர்ப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள். சைவர்கள் சமயசுயாதீன மடைந்ததன் பயனாக யாழ்ப்பாணத்திலே 1834-ல் 239 சைவப்பள்ளிக்கூடங்களிருந்தன. அதேகாலத்தில் 160 புரொட்டெஸ்தாந்த பள்ளிக்கூடங்களும் 24 கத்தோலிக்க பள்ளிக்கூடங்களுமிருந்தன. ஆனல் அக்கால அரசியற் பிரமாணங்களினாலும் அரசாட்சி நன்கொடையின்மையாலும் சைவப் பள்ளிக்கூடங்கள் வரவர அருக கிறீஸ்த பள்ளிக்கூடங்கள் திகமாயின. வயிற்று வளர்ப்புக்கும் உத்தியோகத்திற்கும் கலியாணத்திற்குமாகவே அநேகர் கிறீஸ்த சமயத்திற் பிரவேசித்தார்கள். அவர்களுட் பெரும்பாலோர் அகத்திற் சைவர்களாயும் புறத்திற் போலிக் கிறீஸ்தவர்களாயு மொழுகி வந்தார்கள்.

## ஆறுமுகநாவலர்

இந்த நிலைமையிற்றான் ஆறுமுகநாவலர் அவர்கள் அவதாரஞ் செய்தார்கள். அவர்கள் சைவசமய வளர்ச்சியின் பொருட்டும் கல்வி வளர்ச்சியின்பொருட்டும் உடல் பொருள் ஆவிமூன்றையும் அர்ப்பணஞ் செய்தார்கள். அது "உத்தியோகம் இல்வாழ்க்கை முதலிய வற்றிற் புகாமைக்குக்காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்விவளர்ச்சியையும் வளர்த்தல் வேண்டுமென்னும்பேராசையேயாம்" என்னும் அவர்கள் வாக்கினலேயே நன்கு அறியப்படும். நாவலரவர்கள் அவதாரஞ் செய்யாவிடின் இங்கே இப்பொழுது ஒரு சைவ சமயியைத்தானுங் காண்டலரிதாயிருக்கும். இந்தநாடு கிறீஸ்தவநாடாய் இங்கேயுள்ளவர்களெல்லாங் கிறீஸ்தவர்களாயே இருப்பார்கள். அபிமந்யு மகாபாரதயுத்தத்தில் பதினன்காம் நாளில் தானெருவனுகவே நின்று பகைவர்களை எதிர்த்தவாறுபோல நாவலரவர்கள் அக்காலத்தில் தாமொருவராகவேயிருந்து சைவசமயத்தை வேரோடுகளையத் தலைப்பட்ட கிறீஸ்தவர்களை எதிர்த்துச் சைவசமயத்தை ஸ்தாபனஞ் செய்தார்கள். அக்காலத்துச் சமய நிலையையும், அவர்கள் பட்ட கஷ்டங்களையும் அவர்கள் வெளியிட்ட "யாழ்ப்பாணச்சமயநிலை" முதலிய பத்திரிகைகளாலும் விஞ்ஞாபனங்களினாலும் நன்கு அறியலாம். விஞ்ஞாபனங்களில் ஒருசில பகுதியை ஈண்டுக் காட்டுகின்றேன். அவை வருமாறு:—

"கிறீஸ்தசமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும் வெகுதிரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும் தங்கள் ஆலயங்களிலும் பிறவிடங்களிலும் போதித்தும் வருகிறபடியினலே அவர்கள் சமயம் எத்தேசத்திலும் வளர்ந்தோங்கி வருகின்றது".

"நம்முடைய சைவசமயிகள் சைவ நூலைக் கல்லாமையினாலும் எங்கேயாயினுஞ் சிலர்கற்றாலும் அவர்கள் பிறருக்குங் கற்பித்தலும் யாவரும் எளிதிலறிந்துய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும் நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது".

"நமது சற்சமயமாகிய சைவசமயங் குன்றுகின்றதேயென்றும், இச்சமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்ய வேண்டுமேயென்றும் அவைகளுக் குதவிசெய்பவர்கள் இல்லையேயென்றும் ஐயையோ இதற்கு என்ன செய்வேனென்றும் நெடுங்காலமாக நினைந்து நினைந்து பெருமூச்செறிதலும் பலருக்குப் பிதற்றுதலுமே தொழிலெனக் கொண்ட என் உண்மையை நெடுங்காலமாக அறிந்திருக்கின்ற என்னிஷ்டர்களும் மாணாக்கர்களும் இந்தச் சிவபுண்ணியத்தின் பொருட்டு இப்பொழுது தங்கள்தங்களாலியன்ற பொருளுதவி செய்யும் பொருட்டும் தங்கள் தங்கள் சிவஞேயமாயம் உள்ளவரையும் காலந்தோறும் யாதாயினும் நிபந்தத்திரவியங் கொடுத்து வரும்படி சங்கற்பித்து அச்சங்கற்பந் தவருமல் நடத்திவரும் பொருட்டும் வேண்டுவார் வேண்டியதே ஈயும் பரமகருணாநிதியாகிய நடேசர் அவர்கள் உள்ளத்தைக் கவனித்தருளுவரென்று விசுவசிக்கின்றேன். என்னுண்மையை யறியாத மற்றவர்களுக்கு இந்தச் சிவபுண்ணிய முயற்சிகளைத் தெரிவித்தல் மாத்திரஞ் செய்கிறேன். இதற்கு உதவிசெய்யும்படி அவர்களை நானிப்போது கேட்பதில்லை, அவர்கள்தாமே இதற்கு உதவிசெய்வார்களாகில் அவர்களைத் தடுப்பதுமில்லை.

'நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறதோ என்றுங்கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க்கல்வியுஞ் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்கள் தோறும் வித்தியாசாலை தாபித்தலுஞ் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம்".

நாவலரவர்கள் தமது கல்விப்பெருக்கைக் காட்டாமல் காருண்ய மிகுதியினல் பாலர் தொடங்கி விருத்தர் இறுதியாக உள்ளவர்கள் சைவசமயத்திலும் தமிழ்க்கல்வியிலும் படிமுறையானே விருத்தியெய்துதற் கேற்றவாறு நூல்களையியற்றியும் அச்சிட்டும் உதவி புரிந்தார்கள். அன்றிப்பிரசங்கவாயிலாகவும் அநேக திருத்தங்கள் செய்தார்கள். இவ்வளவோடமையாது வித்தியாசாலைகளைத் தாபித்தும் மற்றவர்களைத் தாபிக்கும்படி தூண்டியும் வேதனம் பெருது கற்பித்தும் அளவிறந்த நன்மைகள் செய்தார்கள்,

அக்காலத்தில் வித்தியாசாலைகள் அரசாட்சியாரின் நன்கொடையின்றியே நடைபெற்றன. நாவலரவர்களின் இடையருமுயற்சியின் பயனாக 1870 ம் ஆண்டு தொடங்கிச் சைவவித்தியாசாலைகளுக்கும் நன் கொடை வழங்கப்பட்டது.

ஆங்கிலங்கற்று உத்தியோகம் பெறும் பொருட்டுச் சிலர் கிறீஸ்தவ பாடசாலைகளிற் படித்துக் கிறீஸ்த சமயத்திற் பிரவேசித்தார்கள். இதனைக்கண்ட நாவலரவர்கள் ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையுந் தாபிக்கப் பெரிதும் முயன்றார்கள். அன்றி, கும்பகோணம் முதலிய இடங்களுக்குப் போய் ஆங்கிலம் படிக்கும்படியும் பலரைத் தூண்டினர்கள். இவ்விஷயத்தில் நாவலரவர்கள் அதிக சித்தியடையவில்லை.

நாவலரவர்களால் எங்கள் நாடும் எங்கள் சமயமும் தமிழ்க் கல்வியும் புத்துயிர் பெற்று அவர்கள் காலந்தொடங்கி வளர்ச்சியடைந்தே வருகின்றதென்று கூறவேண்டும்.

நாவலரவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி அவர்கள் வழிவழியே நீர்வேலிச் சங்கர பண்டிதரவர்களும் நாவலரவர்களின் மாணவர்களான செந்திநாதையர் சபாபதிநாவலர் முதலானவர்களும் சைவசமய விருத்திக்குக் கைம்மாறு கருதாது செய்த உபகாரங்களை அறியாதவர் யாவர்?

## சைவதாபனங்கள்.

நாவலரவர்கள் சிவபதமடைந்து சிலகாலஞ் சென்றபின் அவர்கள் மருகரும் மாணக்கருமாகிய வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை யவர்களும் வேறு பிரபுக்களுமாக யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபையை ஸ்தாபித்தார்கள். அச்சபை சைவப்பிரசாரகர்களை நியமித்தும் இந்துசாதனம் என்னும் பத்திரிகையை நடாத்தியும் இந்துக்கல்லூரியென்னும் இக்கல்லூரியைத் தாபித்தும் சைவத்தை வளர்த்து வந்தது. இந்துக்கல்லூரி 1889 ல் தொடங்கப்பட்டது. 1895 ல் தான் நன்கொடை பெற்றது.

இவ்வாறு சைவப் பிரசாரகர்களாலும் சைவ கலாசாலைகளாலும் வளர்க்கப்பட்டு வந்த சைவசமயம் இடையில் அழுக்காறும் பிறவுங்காரணமாக ஏனைய மதாபிமானிகளாலும் பத்திரிகைகளாலும் அநியாயமாகவே கண்டிக்கப்பட்டது. அக்காலம் மதத்துவேஷம் மிக்கதொரு காலமென்றே சொல்லவேண்டும். அக்காலத்திற் சமயவிஷயமான தர்க்கங்களும் கண்டனங்களும் பத்திரிகைகளும் அளவின்றியெழுந்தன. ஞானமிர்தம், ஞானசித்தி, ஆத்மபோதினி உதயபானு முதலிய பத்திரிகைகள் தோன்றிச் சைவத்தைப் பாதுகாத்தன. கண்டனக்கும்மிகளும் துண்டுப்பத்திரிகைகளும் பிரசுரமாயின. சங்கரபண்டிதர், சபாபதிநாவலர், செந்திநாதையர், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலியோர் கிறிஸ்தமத கண்டன நூல்கள் செய்தார்கள்.

"முத்துக் குமார கவிராச சேகரன் மொய்யமரிற்
றத்திக் தடக்குண்டு நாவலர்தாவச் சவிமடிந்து
சித்தங் கெடவுடல் தாமோத ரேந்த்ரன் சிதைத்தபைபின்
செத்துக் கிடக்குதுபார் சில சங்கரன் றெம்முனைக்கே".

என்பது வடதேசத்துப் புலவர் ஒருவர் பாடிய பாட்டு. இதனலும் அக்காலத்து நிலை விளங்கும். விவேகானந்த சுவாமிகளும் அக்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்து இவ்விந்துக் கல்லூரியில் உபந்யாசஞ் செய்தும் வண்ணைவயித்தீசுவரன் கோயிலைத் தரிசித்து அருச்சகரிடம் விபூதி பெற்றுத் தரித்து வைத்தீசுவரனையும் தையல் நாயகியையும் நமஸ்கரித்து முன் மாதிரியைக்காட்டியும் சைவக் கொள்கைகளைப் பாராட்டிச் சைவநன்மக்களை ஊக்கப்படுத்தி வைத்தார்கள்.

சமீபகாலந்தொடங்கி சேர் பொன் இராமனாதன் அவர்களின் முதாபனங்களாலும் இராமகிருஷ்ண விவேகானந்த சபையாராலும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தாராலும் சைவபரிபாலன சபையாராலுஞ் சைவக்கலைகளுங் கொள்கைகளும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இற்றைக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன்

(தொடர்ச்சி 12 பக்கம்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக இம்மாகாநாடுபோலச் சைவசித்தாந்த மகாசமாஜமும் சைவவாலிப சங்கங்களின் மகா சமாஜமும் சைவத்துக்குப் பெரிதும் உழைத்துவந்தன.

ஆங்கில அரசாட்சியார் சமயவிஷயங்களில் நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்பவர்களாயினும் கல்வி, கலாசாலை உத்தியோகம் முதலிய விஷயங்களில் சில ஆண்டுகளுக்குமுன் கிறீஸ்தவகுருமார் பாதிரிமார்களின் செல்வாக்கையே பெரிதும் மதித்து வந்தார்கள். அதனால் கல்விவிஷயங்களில் அவர்களுக்குப் போதிய வசதிகளும் சிலாக்கியங்களும் கிடைத்தன. சைவருக்கு விரோதமான சிலபிரமாணங்கள் சைவக்கல்விக்குப் பெரிதும் இடையூறு விளைத்தன. பிரமாணங்களுள் ஒன்று பள்ளிக்கூடங்களிலிருக்குங் கிராமங்களில் அப்பள்ளிக்கூடங்களுக் கணித்தாகப் புதுப்பள்ளிக்கூடங்களமைக்கப்படின் அவை நன்கொடை பெறா என்பது. அணிமை யென்பதற்கு நெடுங்காலமாக ஒரு மைல் என்றும், பின்னர் கால் மைல் என்றும் வியாக்கியானஞ் செய்து வந்தனர். இந்நிபந்தனை 1926 ல் முற்றாயழிக்கப்பட்டது. மற்றொரு பிரமாணம் புதிதாயமைக்கப்படும் பள்ளிக்கூடத்துக்கு ஐந்து வருடம் நடாத்தப்பட்டபின்னரே நன்கொடை உதவப்படும் என்பது, 1919 ல் 5 வருட நிபந்தனை 2 வருடமாக்கப்பட்டது. அந்நிபந்தனையும் 1926 ல் அழிக்கப்பட்டது. 1896 ல் வித்தியாகர்த்தருக்கு ஆலோசனை சொல்வதற்காக ஓர் கலாசங்கந் தாபிக்கப் பட்டது. அக்கலாசங்க அங்கத்தவர்கள் 1920 ம் ஆண்டுவரையும் பாதிரிமாராயும் ஏனைய கிறீஸ்தவர்களாயுமிருந்தார்கள். அதனால் அவர்கள் தங்கட்குச் சாதகமான பிரமாணங்களையும் சைவர் புத்தருக்குப் பாதகமான பிரமாணங்களையும் ஆக்குவித்து வந்தார்கள். கிறீஸ்தவர்கள் பெற்றோர்கள் விரும்பாதவிடத்தும் பிள்ளைகளுக்குத் தம்மதக் கொள்கைகளைப் படிப்பிக்க அதிகார முடையவர்களாயும் இருந்தார்கள். மனச்சாட்சிப் பிரமாணங்கள் எழுத்தளவில் இருந்தனவேயன்றி அநுட்டானத்துக்கு வரவில்லை.

1926-ம் ஆண்டின் பின் அநேக சைவவித்தியாசாலைகள் தாபிக்கப்பட்டன. அவற்றாலும் ஏனைய பிற நிலையாலும் பரந்த சாஸ்திர அறிவு சமய அறிவு வளர்ச்சியாலும் மதத்துவேஷங்கள் குறைந்து சகோதரபாவம் மிகுந்து மத மாற்றம் அடியோடு அருகிவிட்டது. பல மதஸ்தர்களும் ஒரே மேடையில் அளவளாவி உறவாடுகின்ற காலமாய் விட்டது. சமயங்களைப் பக்ஷபாதமின்றி நோக்குவாரும் அவற்றை உள்ளபடி வியந்து பேசுவாரும் அந்நிய மதஸ்தர்களிலுங் காணப்படுகின்றனர். சைவத்துக்குப் புறத்தேயிருந்துவரும் இடர்கள் இப்பொழுது மிகக் குறைந்துவிட்டது. உத்தியோகத்திற்குஞ் சம்பளத்திற்கும் பெண்ணுக்கும் மதமாற்ற மேற்பட்ட காலம் போய் விட்டது. அரசியலிலுஞ் சகலரும் சமத்துவ உரிமை பெறுங் காலமாய்விட்டது. இப்பொழுது தெருவோரங்களிலுள்ள கோயில்களைப்பற்றிய விவாதம் அறியாமையா லுண்டானது. காரியங்களை உள்ளபடி யெடுத்துக் காட்டுவதற்கு அரசாங்க சபையி லெங்களுக்குப் பிரதிநிதிக ளில்லாமையே காரணம்.

### வளர்ச்சிக்குரிய தடைகள்.

சைவத்தை வளர்ப்பதற்குத் தடையாயுள்ள புறக்காரணங்களெல்லாம் அழிந்தொழிந்தமை மேற் காட்டப்பட்டது. இப்பொழுது தடையாயிருப்பவை சில அகக்காரணங்கள். அவற்றுளொரு சிலவற்றை யெடுத்துக் கூறலாமென் றெண்ணுகின்றேன். அவை வருமாறு:—

I. சைவப்பிள்ளைகள் தம் சமய ஒழுக்கப்படி கல்வி கற்பதற்குப் போதிய கலாசாலைகளில்லாமை.

II. சைவமதக் கொள்கைகள் இவைதாமென்று சாதாரண சனங்களுமறியும்படி செய்யவல்ல தாபனங்களில்லாமை, நூல்களில்லாமை.

III. அறியாமையினால் ஆடுகோழிகளைச் சிலகோயில்களிற் பலியிடும் வழக்கம் பாவியிருத்தல். அக்கோயில்கள் சைவக்கோயில்களாக மதிக்கப்படல்.

IV. சில ஆண்டுகளுக்குமுன் நீக்கப்பட்ட பல மதுக்கடைகள் மீண்டுந் திறக்கப்படல்; திறப்பதைத் தடுப்பதற்கு எம் மதஸ்தர்கள் ஒருங்குகூடி முன்போல உழையாமல் விட்டமை.

V. அநாசார பழக்க வழக்கங்களை (புலாலுண்ணல், மதுபானஞ் செய்தல் பொய்சொல்லல் களவெடுத்தல் முதலியன) சிறுவயசு தொடக்கம் வெறுக்கப்பண்ணக்கூடிய வழியில் கல்வியை யூட்டுவதற்குத் தகுந்த ஆசார சீலரான ஆசிரியர்களும் குருவகுப்பினர்களுமில்லாமை, சங்கங்கள் ஆதீனங்களில்லாமை; பாடபுத்தகங்களில்லாமை.

VI. குருவகுப்பைப் பயிற்றுவதற்குத் தகுந்த கலாசாலைகளும், ஆசிரியருமில்லாமை. கலாசாலைகளிருந்த போதிலும் மாணவர்முன்வாராமை. சுன்னாகம் பிராசீனபாடசாலை இதுவிஷயத்தில் அபிமானிப்பாரின்றி யிருப்பது சண்டுக் குறிப்பிடத்தக்கது.

VII. வளர்ந்த மாணவர்களைச் சமயநெறியிலீடுபடுத்தும் பொருட்டுக் கிறீஸ்தவர்கள் பெரிய நகரங்களில் சமயசம்பந்தமான விடுதிச்சாலைகளை வைத்திருப்பதுபோல நம்மவர்கள் வைத்திராமை.

VIII. சமயசாஸ்திரங்களை ஆராய்வதற்கும் அவற்றை ஏனையோர்க்குப் போதிப்பதற்கும் வசதிகளும் ஏற்பாடுகளும் முதலுமில்லாமை.

IX. ஆசிரியருள்ளும் கோயிற்பூசகர்களுள்ளும் குருக்கள்மாருள்ளும் பெரும்பாலார் தந்தொழிலிற் பற்றின்றிக் கூலிக்கு மாரடித்தல். இன்னோரன்ன.

### வளர்ச்சிக்கு வேண்டியன.

இனி இம்மகாநாட்டின் பயனாகச் சைவசமயத்தை நன்னிலைப் படுத்தி அபிவிருத்தி செய்தற்கு வேண்டிய விஷயங்களும் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படவேண்டும். அவற்றுள்ளும் ஒருசிலவற்றைக் கூறுகின்றேன். அவைவருமாறு:

1. சமயபாட பரீக்ஷை நடாத்தல் (கொழும்பு விவேகானந்த சபையார் சமயபாட பரீக்ஷைகள் சில நடாத்திவருதல் கண்டுக் குறிப்பிடத்தக்கது) அதற்குப் படிமுறையாக நூல்களொழுங்குதல். இப்பரீக்ஷையில் எல்லாச் சைவமாணவரும் பிரவேசிக்கும்படி முகாமைக் காரர்கள் கட்டளை செய்தல்.

2. பரீக்ஷையில் விசேட சித்தியடைபவர்களுக்கும் சமயாநுஷ்டானத்தில் திறமைகாட்டுபவர்களுக்கும் பரிசளித்தல், சன்மானித்தல்.

3. ஆசிரியர் நல்லொழுக்கமுடையராய் மதுமாமிசம் இல்லாதவராய் ஆசாரசீலராயிருக்கவேண்டுமென வற்புறுத்தல். அவ்விதஆசிரியர்களைப் பயிற்றுதற்கும் அவர்களுக்குச் சமயசாஸ்திரங் கற்பித்தற்கும் ஏற்ற தாபனங்களையியற்றல்.

4. சைவப்பிரசாரகர்களை நியமித்தல்; அவர்களுக்குத்தக்க வேதனங்கொடுத்தல்.

5. தாழ்த்தப்பட்டோரையும் தாழ்ந்தகுலத்தோரையும் மேனிலைப்படுத்தல். அவர்களுக்குக்கலாசாலைகளிற் சமாசனங் கொடுத்தது போலக்கோயில்களிலும் சம உரிமை கொடுப்பதற்குரிய வசதிகளையாக்கல்.

6, புறச்சமயிகள் தாழ்த்தப்பட்டோர் காரணமாகச் சைவசமயத்துக்குச் செய்யுந்தீமைகளையகற்ற வழிதேடல்.

7. சாதிக் கொரு கோயிலில்லாமல், கோயில்களைப் பொதுவாகவைத்து வீண் ஆடம்பரங்களும் வியாச்சியங்களும் முன்வீட்டுச் சச்சரவுகளுமின்றி நித்திய நைமித்தியங்களைத் தவறாது நடைபெறச் செய்தல். ஆங்காங்குத் தருமசபைகளைத் தாபித்து அச்சபைகள்மூலம் கோயில்களைக் கிரமமாக நடாத்துதல்

8. தேவார பாடசாலை வேதாகம பாடசாலை தாபித்தல்.

9. அருட்பாக்களையுஞ் சமய சாஸ்திரங்களையும் அச்சிட்டு மலிவாகவிற்றல்.

10. தேவாலய மடாலய வித்தியாலயங்களில் புராணபடனஞ் செய்தல். புராண உண்மைகளைச் சமய சாஸ்திர அறிவுள்ளவர்களைக் கொண்டுபோதிப்பித்தல்.

11. ஆண்களுக்குப் போலப் பெண்களுக்கும் கல்விகற்பதற்கும் சமயக்கொள்கைகளை அறிவதற்கும் வசதிகளை ஆக்கல்.

இன்னும் சைவவிருத்திக்கேற்ற இன்னோரன்னபிறவும் சண்டுக்கொள்ளற்பாலன.

## முடிவுரை.

மற்றுமொரு விஷயங்கூறி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். இக்காலத்து மேலைத்தேசநிலைமை மிகு துக்கத்துக்கிடமானது. அங்கேயுள்ளவர்களுக்குச் சமயபற்றில்லை. நம்பிக்கையுமில்லை. ஆன்மா, கடவுள், மறுமை, நரகம், மோக்ஷம் என்ற எண்ணங்கள் எள்ளளவுமில்லை. யாவராயினும் ஒரு சிலர்க்கு இருக்குமாயினும் அவர் கொள்கை சாதாரணசனங்களிடையே பரவுவதில்லை. தேசிய வாதிகளினால் மறைக்கப்படுகின்றது. அதனால் அங்கேயுள்ளவர்கள் லௌகிக விருத்தி ஒன்றுமே கருதி இரவும் பகலும் உழைக்கின்றார்கள். ஒரு தேசம் மற்றொரு தேசத்தை விழுங்குதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றது. வகுப்புவாதங்களும் நிறபேதங்களுங் கொழுந்துவிட் டெரிகின்றன. முதலாளிகள் ஏழைகளை நசுக்கி விடுகின்றார்கள். சமாதானம் ஆயுதப்பரிகாரணம் என்பன வெல்லாம் வெறும் போலிப் பகட்டுக்கள். மேலைத்தேசத்தில் பேச்சொன்று; செயல் ஒன்று. லண்டன்மாநகரில் இந்தியா விஷயமாகக் கூடிய மகாநாடுகள் மிகப்பல. இறுதியில் அவற்றால் நடந்த தொன்றுமில்லை. இப்படிப்பட்ட மேலைத்தேசநோய் இப்பொழுது இந்நாட்டிலும் பரவுகின்றது. இது பரவி வருமாயின் மனிதர்கள் விலங்குகளாய் விடுவார்கள். மனிதர்களுக்குள் தேவர்களுமுண்டு. மனிதர்களைத் தேவர்களாக வைப்பது தான் உண்மைச்சமயம். அதனாலே தான் சகோதரபாவம் உண்டாகும். தன்னுயிர்போல் மன்னுயிரையுங் காக்கவைப்பது அதுவே. அச்சமய உண்மைகள் சாதாரணசனங்களிடையே பரவ வேண்டும். பழைய சமய சாஸ்திரக் கொள்கைகளை ஆராய்வாரும் கேட்பாரும் இக்காலத்தில் மிக அரியர். பழைய சாஸ்திரக் கொள்கைகளுக்கும் இக்காலக் கொள்கைகள் சிலவற்றிற்கும் பலவேறுபாடுகள் இருக்கவுங் கூடும். சில கொள்கை கால வேறுபாட்டால் வேறுபடுவதுமுண்டு. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்பார்கள். மிருதிகள் கால தேச வேறுபாடு பற்றி எழுந்த நூல்களே. பழைய சமய சாஸ்திரங்களில் வல்லவர்கள் பழைய கால நிலைமையும் இக்கால நிலைமையும் நன்கு சீர்தூக்கி இக்காலத்துக்கேற்ற நெறிகளைச் சாஸ்திரங்களோடு முரணுதவாறு இவையெனத் தெளிவாகப் போதிக்க வேண்டும். இவ்வாறான நெறிகளில் அறிவாளிகளைச் செலுத்தி, சாதாரண சனங்களிடையே சகோதரபாவத்தை உண்டாக்கி அவர்கள் அந்நெறிகளைக் கடைப்பிடித்து இம்மை மறுமையின்பங்களை எளிதில் எய்தவைப்பதே இம்மகாநாடு போன்ற மகாநாடுகளின் நோக்கமாதல் வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இவ்வளவில் எனது உரையை முடிக்கிறேன்.

முற்றிற்று.

Printed and Published by S. Adchalingam, residing at Ayanarkovilady, Vau: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.